பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 07 திங்கட்கிழமை 20.05.2024 கதிர் 194

## இனி இது ரகசியம் அல்ல!

தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தில் தமிழ் அரசுக் கட்சியின் மீது பழியைப்போட்டுவிட்டு தாங்கள் தப்பிவிடலாம் என்று பார்த்துக் கொண்டிருந்த மற்றைய கட்சிகளுக்கு ஏமாற்றமே மிஞ்சியிருக்கின்றது. அவர்களைத் திரிசங்கு சொர்க்கத்தில் சிக்கவைத்துவிட்டது அந்தக் கட்சி.

பொதுவேட்பாளர் தொடர்பில் எந்தத் தீர்மானமும் தமிழ் அரசுக் கட்சியின் நேற்றைய மத்திய செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப் படவில்லை. பொது வேட்பாளர் தொடர்பில் ஒரு முடிவை எடுக்க வேண்டிய அவசியம் இப்போதைக்கு இல்லை என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இருந்தாலும், ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் கூட்டத்தில் ஆதரவு அலை ஒன்று காணப்படவில்லை என்று அறிய முடிந்தது. இன்னும் சொல்லப் போனால் எதிர்ப்பு அலையே அங்கு காணப்பட்டது. அதைப் பார்த்ததும் தமிழ்ப்பொதுவேட்பாளர் விடயத்தை ஆதரித்துப் பேசிய மூவரும்கூட தமது நிலைப்பாட்டை ☞2

## பொருளாதார விவாதத்துக்கு திகதி ஒதுக்கியது ஐ.ம.சக்தி

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் மற்றும் இரு கட்சிகளின் பொருளாதாரக் குழுகள் இடையில் இடம் பெற இருக்கும் விவாதத் துக்காக ஐக்கிய மக்கள் சக்தி திகதி வழங்கியுள்ளது.

இரண்டு கட்சிகளின் பொருளாதாரகுழுக்களுக் கிடையிலான விவா தத்தை மே 27க்கும் 31க்கும் இடைப்பட்ட திகதி ஒன்றிலும் தலைவர்களுக்கு இடையிலானவிவாதத்தைஜூன் 3 முதல் 7 வரையான நாள்களுக்குள் ஒன்றில் நடத்துவதற்கு நடவடிக்கைஎடுகப்பட்டுள்ளது. இது தொடர்பாக தேசிய மக்கள் சக்திக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

அத்துடன் இரண்டு கட்சிகளின் பொருளாதாரக் குழு மற்றும் தலைவர்களுக்கிடையில் இடம் பெறும் விவாதத்துக்குத் தேவையான இணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திடம் கோரியிருப்பதாகவும் விவாதத்துக்கான ஊடக நடவடிக்கைக்கு அனைத்து ஊடக நிறுவனங்களுக் ☞2

### நாட்டைச் சூறையாடுபவர்களிடம் அதை மீட்க

## படையினரைத் தன்னுடன் கைக்கோர்க்க சஜித் அழைப்பு

பயங்கரவாதிகளிடமிருந்துநாட்டைக்காப்பாற்றிய படையினர் நாட்டைச் சூறையாடுபவர்களிடமிருந்து அதனைமீட்டெடுப்பதற்காகத் தன்னுடன் கைகோர்க்குமாறு பகிரங்கக் கோரிக்கை விடுப்பதாக எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாசதெரிவித்துள்ளார்.

அத்துடன் தான் பதவியேற்று 48 மணிநேரத்தில் படையினருக்காக ஜனாதிபதிவிசேடசெயலணிக் காரியாலயம் ☞8

## ஒற்றையாட்சி நீக்கப்படுகின்ற வரையில் ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிப்போம்

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு

இலங்கையில் ஒற்றையாட்சிஅரசமைப்புநீக்கப்பட்டு சமஷ்டிஅரசமைப்புஉருவாக்கப்படுவதற்கானஉத்தரவாதம் வழங்கப்படும்வரை ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிப்போம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறைகூவல் விடுத்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிப்போம் தமிழின நலன் சார்ந்து சிந்திப்போம் எனும் தலைப்பில் அந்தக் கட்சி ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமது நிலைப்பாட்டைவெளிப்படுத்தி வெளியிட்டுள்ள ☞8

## அடுத்த இரண்டு மாதங்களில் ஐ.ம.சவில் சஜித்தே எஞ்சுவார்

### லால்காந்த ஆருடம்

அடுத்த இரண்டு மாதங்களில் ஐக்கிய மக்கள் சக்தியில் சஜித் மட்டுமே எஞ்சுவார் என்று தேசிய மக்கள் சக்தியின்நிறைவேற்றுக்குழுஉறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சந்திப்பொன்றில் நேற்றையதினம் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது நாடாளுமன்றத் தேர்தலா, ஜனாதிபதி தேர்தலா என்று விவாதிக்கப்படுகின்றது. எமக்கு எந்த தேர்தலுக்கும் முகங்கொடுப்பதற்கான சக்தி உள்ளது. ஆனால் அடுத்த இரண்டு மாதங்களில் என்ன நடைபெறப்போகின்றது என்பதை நான் உங்களுக்கு கூறுவதற்கு கடமைப்பட்டுள்ளேன்.

அந்த வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கபொதுஜனபெரமுனவின் உறுப்பினர்கள்அனைவரும்தன்னுடன் இருக்கிறார்கள் என்று காண்பிப்பார். அச்சமயத்தில் சஜித்தின் தரப்பில் உள்ள அனைவரும் ரணிலுடன் போட்டி போட்டுக்கொண்டு ☞2

# ராணுவத்திற்கு உயர் மதிப்பு வழங்கி போர் மீள வராமல் பார்க்கவேண்டும்

### வெற்றிக் களிப்பின் 15ஆவது நினைவில் மகிந்த கருத்து

**இராணுவத்தின் வீரத்துக்கு உயரியமதிப்புவழங்கிநாட்டில் மீண்டும் போர் தோற்றம் பெறாத வகையில் நாட்டை நிர்வகிப்பது அனைவரினதும் பொறுப்பாகும் என்று முன்னாள்ஜனாதிபதிமஹிந்த ராஜபக்ச வலியுறுத்தியுள்ளார்.**

**இராணுவ வெற்றியின் 15ஆவதுநிகழ்வைமுன்னிட்டு வெளியிட்டுள்ள விசேட** ☞2

## மக்களால் விரட்டப்பட்ட பின்னரும் பாடம் படிக்கவில்லை ராஜபக்சக்கள்

### தங்கள் நலனுக்காக தேர்தல் நடத்த முயற்சி என்கிறார் அனுர

மக்களால் விரடியடிக்கப்பட்ட பின்னும் ராஜபக்சக்கள் பாடம் படிக்கவில்லை. தமது குடும்ப நலனுக்காக தேர்தல்களை நடத்த நிற்கிறார்கள் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

மஹரக பகுதியில் நேற்று இடம்பெற்ற ஓய்வூதியர்களின்தேசிய மாநாட்டில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. அதேபோல் எதிர்வரும் செப்டெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதமளவில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் அதிகாரம் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உண்டு. ஆகவே இவ்விரு தேர்தல்களும் நிச்சயம்வெகுவிரைவில் நடைபெறும்.

நாடாளுமன் ☞8

## இந்தோனேசியாவின் முதலீட்டு அமைச்சருடன் ஜனாதிபதி பேச்சு

### நீலப் பொருளாதாரம், கடற்பாசி வர்த்தகம் குறித்து ஆராய்வு

இந்தோனேசியாவிற்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் இந்தோனேசிய கடல்சார் விவகாரங்கள், முதலீடுகளுக்கான ஒருங்கிணைப்பு அமைச்சர் லுஹூத் பின்சார் பண்ட்ஜாய்டன் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று குர குர பாலி (Kura Kura Bali) தீவிலுள்ள வேற்றுமையில் ஐக்கியம் (United In Diversity) வளாகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பில், குளோபல் பலன்ஸ்ட் பைனான்ஸ் (Global Blended Finance Alliance) அமைப்பின் நாடுகள், வெப்ப வலயத்திற்கான இலங்கையின் முன்னெடுப்பு ☞2

## ஈரானிய தூதர் மீது தாக்குதல் வர்த்தகர் ஒருவருக்கு மறியல்

ஈரானிய தூதுவர் ஏ.டெல்கோஷை தாக்கி விபத்திற்குள்ளாக்கிய கொழும்பு வர்த்தகர் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு 02, முத்தையா வீதி பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையமொன்றின்வாகனநிறுத்துமிடத்திற்குள் தூதுவர்பிரவேசித்த போது, மற்றொரு காரின்சாரதியுடன்வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இதன்போது குறித்த நபர் தூதுவரைத் தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பிச் செல்ல முயன்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதன் பின்னர் சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார், கொழும்பு 07, வோட் பிளேஸில் வசிக்கும் 33 வயதுடையவர்த்தகரைக் கைது செய்துள்ளனர்.

இந்நிலையில் சந்தேக நபர், கொழும்பு புதுக்கடை இலக்கம் 02 நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு, இன்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்

## முதலில் நாடாளுமன்றத் தேர்தல் ஜூன் 14 கலைப்பு அறிவிப்பு வரும்

### அடித்துக் கூறுகின்றார் உதயங்க வீரதுங்க

முதலில் நாடாளுமன்றத் தேர்தல்தான் நடக்கும். ஜூன் 14 நாடாளுமன்றம் கலைக்கப்படும்ஓகஸ்ட்முதல்வாரத்தில் பொதுத் தேர்தல் நடக்கும் என்று ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவரும், ராஜபக்சக்களின் ஒன்றுவிட்ட சகோதரருமானஉதயங்க வீரதுங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று தேசிய தேர்தல் சம்பந்தமாக கருத்து வெளியிடும்போதே அவர் இத்தனைத் தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தல் முதலில் நடைபெறப்போவதில்லை. முதலில்நாடாளுமன்றத் தேர்தல்தான்நடைபெறப் போகின்றது. இதனை நான் பொறுப்புடன் கூறுகின்றேன்.

அந்த வகையில் நாடாளுமன்றத்தினை கலைக்கும் அறிவிப்பானது ஜூன் 14 வெளியிடப்படவுள்ளது. அதனைத் தொடர்ந்து ☞8

## ‘சுரக்ஷா’ மாணவர் காப்புறுதியை மீண்டும் தொடங்க ரணில் பணிப்பு

பொருளாதார நெருக்கடி காரணமாக தற்காலிகமாகஇடைநிறுத்தப்பட்டிருந்த ’சுரக்ஷா’ மாணவர் காப்புறுதித் திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

அதன்படி, நாடு முழுவதிலும் உள்ள அனைத்து பாடசாலை மாணவர்களும் ஜூன் முதல் வாரத்தில் இருந்து இந்தக் காப்புறுதி திட்டத்தின் கீழ் நன்மைகளைப் பெற முடியும்.

இது தொடர்பில் நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த ஆகியோரினால்முன்வைக்கப்பட்ட இணைஅமைச்சரவைப் பத்திரத்திற்கு அண்மையில் அமைச்சரவை அனுமதிகிடைத்திருந்தது.

சுகாதார பிரச்சினைகள் காரணமாக கல்விச்செயற்பாடுகளை தொடர முடியாத மாணவர்களுக்கு கல்வியைத் தொடர வாய்ப்பளித்தல், அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திபாடசாலை வரவையும்மேம்படுத்தல் உள்ளிட்ட விடயங்களை நோக்கமாக கொண்டு 2017 ஆம் ஆண்டில், அப்போதைய பிரதமர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் எண்ணக்கருவுக்கமைய ’சுரக்ஷா’ மாணவர் காப்புறுதித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இத்திட்டம் ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

அழுத்திக் கூறுவதற்குப் பதில், தமது கருத்தை அங்கு பதிவு செய்வதுடன் நிறுத்திக்கொண்டனர்.

முக்கியமாக, தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவான தமது கருத்தைக் கூட்ட அறிக்கையில் பதிவு செய்யவதில் மட்டுமே அவர்களின் கவனம் இருந்தது. தமது கருத்தை அப்படியே பதிவு செய்யும்படிவலியுறுத்தியதற்குமேல் இந்த விடயம் குறித்து அவர்களும் எதுவும்வாதாடவில்லை. ஒற்றுமைக் கூட்டணியில் உள்ளவர்களுக்குத் தெரிவிப்பதற்காக அல்லது பின்னாளில் வேறு யாராவது மீதும் பழியைத் தூக்கிப் போடுவதற்கு வசதியாக இப்போதைக்குத் தங்கள் கருத்தை கூட்ட அறிக்கையில் பதிவு செய்துகொண்டால் போதும் என்று நினைத்தார்களோ என்னவோ அவர்கள் அப்படித்தான் நடந்துகொண்டார்கள் என்கிறார்கள்.

தமிழ் அரசுக் கட்சியின் தெரிவு செய்யப்பட்ட தலைவர் சிறீதரன், மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன் ஆகியோரே தமிழ்ப்பொதுவேட்பாளர் விடயத்தில் முழுமையாக ஆதரித்துப் பேசியவர்கள், சட்டத்தரணி கே.வி.தவராசா வழக்கம் போல இரு பக்கமும் பேசினார் என்றும் அவரது கருத்தையும்வேண்டுமானால்தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவானதாக எடுத்துக்கொள்ளலாம் என்றும் இழுத்தார்கள் கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள். (எதற்கு கூட்ட அறிக்கையில் பதிவு செய்ய வேண்டும், பகிரங்க அறிக்கையாக இவர்கள்தான்தமிழ்ப்பொதுவேட்பாளருக்கு ஆதரவாக இருந்தார்கள் என்றுபகிரங்கமாகப்பதிவுசெய்துவிட்டால் அவர்களுக்கும் உதவியாகப் போய்விடும்)

இந்த மூவரைத் தவிர மற்றவர்களில் பெரும்பாலானவர்களிடம் இருந்து தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்திற்கு அழுத்தமான எதிர்ப்பு கூட்டத்தில் காட்டப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக கிழக்கில் இருந்து பலமான எதிர்ப்பு எழுந்தது. கிழக்கில் இந்தக் கோரிக்கைக்கு 20 சதவீதத்துக்கு அதிகமான வாக்குகளைநிச்சயம்திரட்டமுடியாது என்று புள்ளிவிவரங்களுடன் சமப்பித்திருந்தார்கள். குறிப்பாக வடக்கு கிழக்கின் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு எதிரான கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டன. சிறீதரனுக்கு நெருக்கமானவரும் விசுவாசியும் என்று கருதப்படுபவருமான குருகுலராஜாவே எதிர்த்துத்தான் கருத்துச் சொன்னார் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

கூட்டத்தில் மற்றொரு சுவாரஸியமான விடயமும் நடந்திருக்கிறது. சிறீதரனும் அரியநேந்திரனும் எப்படி உசாராகத் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவான தமது கருத்துக்களைப் பதிவு செய்வதில்குறியாக இருந்தார்களோ, அதேபோன்று இந்த விடயத்தில் வாயைத் திறக்கக்கூடாது என்பதில் சுமந்திரனும்குறியாகஇருந்துள்ளார். வாயைத் திறந்தால் எல்லாப் பழியையும் தன் மீது தூக்கிப் போட்டுவிட்டு மற்றவர்கள் நழுவி விடுவார்கள் என்று எச்சரிக்கையாக இருந்திருப்பார் போலும். இது விடயத்தில் மற்றவர்களாக அவரது வாயைப் பிடுங்கும் வரையில் அவர் அமைதி காத்தார். அவரது கருத்தையும் சொல்லுங்கள் என்று மற்றவர்கள் கேட்டதற்குப் பின்னர், பெருந் தலைவர் சம்பந்தனைத் தான் சந்தித்தபோது அவர் கூறிய விடயங்களை மட்டும் கவனமாக எடுத்து வைத்தார். இது விடயத்தில் தன்னுடைய தனிப்பட்ட கருத்தைப் பொருத்தமான தருணத்தில் தெரிவிப்பார் என்று கூறிவிட்டு நழுவி விட்டார்.

பரவாயில்லை, வாயைத் திறந்தால் தன்னைத் துரோகியாக்கி மற்றவர்கள் பிழைத்துக் கொள்வார்கள் என்று பட்டறிவின் மூலம் கற்றறிந்த நண்பரான சுமந்திரன் தெளிவடைந்துவிட்டார் போலுள்ளது. பொது மேடைகளிலும் இதே தெளிவோடு அவர் நடந்துகொண்டால் விரைவிலேயே மற்றைய தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளைப் போன்று அவரும் வாக்குகளை அள்ள வாய்ப்புக்கள் பிரகாசமாக உண்டு.

கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவும் தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தில் ஏதோ முணுமுணுத்தார் என்றும் அது அவருக்கேகேட்டதோதெரியவில்லை என்றும்மற்றவர்கள்சொன்னார்கள். பரவாயில்லைஅவரும்பட்டறிவைப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டார் போலுள்ளது. --கூ-ட்டம் காலை 10.30 மணிக்குத் தொடங்கியது. மாலை 6.30 வரை வவுனியா இரண்டாம் குறுக்கு வீதியில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் நடந்தது.

இறுதியில் தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில் எந்தவொரு முடிவுக்கும் இப்போது போகத் தேவையில்லைஎன்றுமுடிவெடுத்த மத்திய செயற்குழு, கட்சியின் பெருந் தலைவர் சம்பந்தனை இதுவிடயத்தில் நேரில் சந்தித்து பேசுவதுடன் அவரது வீட்டிலேயே அடுத்த மத்திய செயற்குழுக் கூட்டத்தையும் நடத்துவது என்றும் தீர்மானித்துள்ளது. அதற்கான நேரம் காலத்தை முடிவு செய்வதற்கான பணிசுமந்திரனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான சாணக்கியன் மற்றும் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் பங்கேற்றிருக்கவில்லை.

தெற்கில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியி-டும் சஜித், ரணில், அனுர ஆகியோர் தமிழர்களின் முக்கிய அரசியல் தரப்பினருடன் உத்தியோகபூர்வமாக இல்லையாயினும் கலந்துரையாடல்களை நடத்துகிறார்கள் என்று இந்தப் பத்தியில் நான் குறிப்பிட்டிருந்தேன். அவர்கள் ஒவ்வொருவர் தரப்பிலிருந்தும் தெரிவிக்கப்பட்டிருக்கக்கூடிய கருத்துக்கள் குறித்தும் தெரிவித்திருந்தேன்.

தமிழ்அரசுக்கட்சியின்நேற்றைய கூட்டத்தில், ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்களுடன் சுமந்திரன் ஏதாவது கலந்துரையாடல்களை நடத்தினாரான என்று கேள்வி எழுப்பப்பட்டது. அவர்"ஆமாம்"என்று பதிலளித்தார். அவர்களுடன் தான் நடத்திய கலந்துரையாடல்களின் விவரங்களையும் பகிர்ந்து கொண்டார். வேட்பாளர் தரப்பில் தனக்குச் சொல்லப்பட்ட விடயங்களையும் தெளிவுபடுத்தினார். ஆனால், இது விடயத்திலும் கட்சி அவசரப்படத் தேவையில்லை, வேட்பாளர்கள் தங்கள் நிலைப்பாடுகளைப் பகிரங்கமாக அறிவித்த பின்னர் அது பற்றி ஆராயலாம் என்பதேபெருந்தலைவர்சம்பந்தரின் நிலைப்பாடு என்றும் அதுவே தனது எண்ணப்பாடும் என்றும் தெரிவித்தார்.

வேட்பாளர்களுடன் சுமந்திரன் நடத்திய கலந்துரையாடல்களின் விவரங்களுக்கும் நான் நேற்றுக் குறிப்பிட்டிருந்த விவரங்களுக்கும் இடையில் பெரிய வேறுபாடுகள் ஏதும் இருக்கவில்லை.

அதனைத்தொடர்ந்து ஜனாதிபதி தேர்தலில் தென்னிலங்கை வேட்பாளர்கள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டு அவர்களின் நிலைப்பாடுகளை வெளிப்படுத்தப்பட்ட பின்னர் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான கட்சியின்இறுதியானதீர்மானங்களை எடுக்கலாம் என்றும் இது குறித்தும் கட்சியின் மத்திய செயற்குழுவை மீண்டும் கூட்டிப்பேசுவதெனவும் உறுப்பினர்கள்இணக்கம்கண்டனர்.

இன்று இந்த விடயங்கள் நீண்டுவிட்டதால், கட்சியின் வழக்கு விவகாரங்களைப் பற்றிப் பேசிய விடயங்களைநாளைதருகின்றேன்.

இதற்கிடையில் ஒரு கொசுறுத் தகவல், இரண்டு வாரங்களின் பின்னரும் தமிழ் அரசுக் கட்சி தமிழ்பொதுவேட்பாளர் விடயத்தில் எந்தவொரு -முடிவையும் எடுக்காத நிலையில், அடுத்த கட்டம் குறித்து ஆராய்வதற்காக தமிழ்ச் சிவில் சமூகங்களின் கூட்டிணைவு என்ற அமைப்பைச் சேர்ந்தவருகளும் அரசியல் கட்சித் தலைவர்களும் இன்று கூடிப் பேசுகிறார்கள் என்று தகவல். அதன் விவரங்களும் கிடைத்ததும் தருகின்றேன்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ராணுவத்திற்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மூன்று தசாப்தங்களாக இலங்கையை ஆக்கிரமித்திருந்த பிரிவினைவாத, பயங்கரவாதப்போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு 15 ஆண்டுகள்பூர்த்தியைடைந்துள்ளன.

1970 ஆம் ஆண்டு காலப்பகுதியில்ஒருகுழுவாகதொடங்கப்பட்ட தமிழீழவிடுதலைபுலிகள்அமைப்பு 2008ஆம்ஆண்டுகாலப்பகுதியில் உலகில் புகழ்பெற்ற பயங்கரவாத அமைப்பாக எழுச்சிப் பெற்றது.

தற்கொலை மனித குண்டுதாரிகள் மற்றும் சிறுவர் படையணி என்பனவற்றை விடுதலை புலிகள் அமைப்பே உலகுக்கு அறிமுகம் செய்தது. தற்கொலைக் குண்டுகள் அடங்கிய சிறிய ரக படகுகள், இரவு நேரங்களில் தாக்குதல் நடத்த கூடிய இலகு விமானங்கள் உட்பட ஆயுதங்களை கொண்டு வரும் கப்பல்கள்எனபலமானகட்டமைப்பில் புலிகள் அமைப்பு செயற்பட்டதை நினைவுகூரவேண்டும்.

இலங்கை மற்றும் இந்திய அரச தலைவர்கள் இருவர் உட்பட இலங்கையின் மூத்த அரசியல் தலைவர்கள் மற்றும் சிவில் மக்கள் உள்ளடங்களாக பலரைக் கொலை செய்த விடுதலை புலிகள் அமைப்புடன்பேச்சுநடத்தபல்வேறு வழிகளில் அழைப்பு விடுத்தேன். சகல வழிகளையும் நிராகரித்து விடுதலைப் புலிகள் அமைப்பு தாக்குதலை தொடர்ந்ததால் போரை முடிவுக்குக் கொண்டுவரும் எதிர் தாக்குதலை தீவிரமாக முன்னெடுத்தோம்.

போரை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்கு முப்படையினர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்கள். 2009.05.18 வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் முழுமையாக இராணுவத்தின் கீழ் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து 2009.05.19 காலைவேலுப்பிள்ளை பிரபாகரன் உயிரிழந்தமை உறுதிப்படுத்தப்பட்டது.

நான்காவது ஈழ போராட்டத்தை தோற்கடித்தது மாத்திரமல்ல விடுதலை புலிகள் அமைப்பில் பணயமாகதடுத்துவைக்கப்பட்டிருந்த பலஇலட்சக்கணக்கானபொதுமக்கள் பாதுகாக்கப்பட்டார்கள்.

போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அப்போதைய பாதுகாப்பு பாதுகாப்பு செயலாளர், பாதுகாப்பு சபையின் பிரதானி, முப்படைகளின் தளபதிகள், பொலிஸ்மாஅதிபர், சிவில்பாதுகாப்பு படையணியின் பிரதானிகள் மற்றும் முப்படையினருக்கும், நாட்டு மக்களுக்கும் முன்னாள் ஐந்தாவது நிறைவேற்றுத்துறை ஜனாதிபதி என்ற அடிப்படையில் கௌரவமளிக்கிறேன்.

போரின் கொடுமையான அனுபவங்கள் இல்லாத சூழலில் தற்போது வாழ்கிறோம். ஆகவே போர் பற்றிச் சிந்திக்கக்கூடாது என ஒருசிலர் குறிப்பிடுகிறார்கள். இராணுவத்தின் வீரத்துக்கு உயரிய மதிப்பு வழங்கி நாட்டில் மீண்டும் போர் தோற்றம் பெறாத வகையில் நாட்டைநிர்வகிப்பதுஅனைவரினதும் பொறுப்பாகும் – என்றுள்ளது.

## சுரக்ஷா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

01.12.2022 வரை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், பொருளாதார நெருக்கடி காரணமாக, இதற்கான நிதியை வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டதால் இத்திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

எவ்வாறாயினும், நாட்டில் தற்போது பொருளாதார மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கும் நிலையில், 'சுரக்ஷா' மாணவர் காப்புறுதியை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கு 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் 2000 மில்லியன் ரூபாவை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஒதுக்கீடு செய்திருந்தார். 2048 ஆம் ஆண்டளவில்அபிவிருத்தியடைந்த இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு தேவையான மனித வளங்களை உருவாக்குவதற்கான வேலைத்திட்டத்தைபலப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

அதன்படி, அரசாங்க பாடசாலைகள், அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களில் கற்கும் 1- 13 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கும், 5 - 21 வயது வரையான 45 இலட்சம்மாணவர்களுக்கும், விசேட தேவையுள்ள மாணவர்களுக்கான பாடசாலைகளில்பயிலும்4-21வயது வரையான மாணவர்களுக்கும் மருத்துவமற்றும்விபத்துக்காப்புறுதி உள்ளிட்ட சலுகைகளும் இந்தத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும்.

மேலும் குறைந்த வருமானம் பெறுவோர் அதாவது 180,000ஃஸ்ரீ இற்கும் குறைவான வருட வருமானத்தைக் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஆயுள் காப்புறுதியின் கீழ் பெற்றோரின் மரணத்திற்கான நிவாரணங்களும் இந்த திட்டத்தின்கீழ்சகலமாணவர்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

### 1. சுகாதாரக் காப்புறுதி

அரச, தனியார் வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெறுவோருக்கு 300,000 ரூபாய் வரையில் வழங்கப்படும். அதன்படி அரச வைத்தியசாலைகளில் தங்கும் ஒரு இரவிற்காக 2500 ரூபாய் வழங்கப்படும். (அரச வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெற்றுக்கொண்டாலும் பெற்றோர் தொழிலுக்குச் செல்ல முடியாமல் எதிர்கொள்ளும் அசௌகரியங்களை கருத்தில் கொண்டு இந்த கொடுப்பனவு வழங்கப்படுகிறது.) தனியார் வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெறுவோருக்கு ஒரு இரவுக்கு 7500 ரூபாய் என்ற அடிப்படையில்வழங்கப்படவுள்ளது.

நிவாரணத் தொகை - 20,000 ரூபாய் வரையில்

ஏற்கனவே காணப்பட்ட கண் குறைபாடுகளுக்கான கண்ணாடிகள், செவிப்புலன் குறைபாட்டிற்கான செவிப்புலன் கருவிகளுக்கானநிவாரணங்களும் வழங்கப்படவுள்ளன. அத்தோடு பிள்ளைகள் நோய்வாய்ப்படும் வேளையில் வெளி ஆய்வுக் கூடங்களில் பெறப்படும் அறிக்கைகளுக்கான கொடுப்பனவுகளும் வழங்கப்படவுள்ளன.

பாரதூரமான நோய்களுக்கு 200,000 ரூபாய் முதல்1,500,000 ரூபாய் வரையில் வழங்கப்படும்.

### 2. விபத்துகளுக்கான காப்புறுதி

முழுமையான நிரந்தர ஊனத்திற்கு- 200,000 ரூபாய் வழங்கப்படும்.

முழுமையான இடைநிலை ஊனத்திற்கு - 150,000 ரூபாய் முதல் 200,000/= வரையில் வழங்கப்படும்.

தற்காலிகஊனத்திற்கு25,000/= முதல்100,000 ரூபாய் வரையில் வழங்கப்படும்.

### 3. வாழ்வாதாரக் காப்புறுதி

பெற்றோரின் மரணத்தில் - குறைந்த வருமானம் ஈட்டும் குடும்பப்பிள்ளைகளின்பெற்றோரில் ஒருவருக்கு 75,000 ரூபாய் வரையில் வழங்கப்படும்.

பெற்றோர் இருவருக்கும் இந்த நிவாரணம் வழங்கப்படும்.

ஒரு குடும்பத்தில் பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு இந்த நிவாரணங்கள்உரித்தாகும். ஆனால் ஒரு பிரச்சினைக்கு அதிகபட்சமாக 225,000 ரூபாய் ஒதுக்கப்படுகிறது. (அதிகபட்சமாக 3 குழந்தைகளுக்கு தலா 75,000 ரூபாய்ஒதுக்கப்படும்.) இந்தக் காப்புறுதி திட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பாக கல்வி அமைச்சு இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன்உடன்படிக்கை செய்து கொள்ளவுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இணையவழி முறையின்ஊடாகஇந்தநன்மைகள் அனைத்தையும் விரைவாக (குறைந்தபட்சம்ஒரு வாரத்திற்குள்) பெற்றுக்கொள்ளும்வகையில்விசேட முறைமையொன்று இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் உருவாக்கப்படவுள்ளது.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 'சுரக்ஷா' காப்புறுதியின் கீழ் குழந்தைகளுக்கு உரித்தான நிவாரணம், பெற்றோரின் வங்கிக்கணக்குகளில்வைப்பிலிடும்.

இந்த வேலைத்திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்காக ஜனாதிபதி செயலகத்தின் அரச வருமானப்பிரிவின் முழுமையான மேற்பார்வையின் கீழ் பாடசாலை அதிபர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட அரசஅதிகாரிகளுக்கானவிசேடஒருங்கிணைப்பு பொறிமுறையொன்றும் உருவாக்கப்படவுள்ளது.

கல்வி அமைச்சும் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனமும் இணைந்து ஜனாதிபதி செயலகத்தின் அரச வருமான பிரிவுடன் ஒருங்கிணைந்து இந்த வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

## அடுத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்று கைகோர்ப்பார்கள். அதன் பின்னர் பொது ஜன பெரமுனவை கைவிட்டு ரணில் தேர்தல் நோக்கிச் செல்வார். ஐக்கிய மக்கள் சக்தியில் சஜித் மட்டும்தான் எஞ்சுவார். இந்தப் பரிதாப நிலைமைதான் நடக்கப்போகின்றது.

அதேநேரம் அவர்கள் ஆட்சிப்பொறுப்பினை ஏற்று அடுத்த எழுபது வருடங்களுக்கு தங்களது ஆட்சியதிகார வரலாற்றை எழுதவேவிருப்பம்கொண்டுள்ளனர். ஈற்றில் நாடு என்பதே இருக்காத நிலைமையேஏற்படும்ஆபத்துள்ளது - என்றார்.

## பொருளாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கும் அழைப்பு விடுப்பதாகவும் நளின் பண்டார தெரிவித்தார்.

இதேவேளை, தேசிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளின் தலைவர்களுக்கிடையிலானவிவாதத்துக்கான திகதி இன்று 20ஆம் திகதியுடன் முடிவடைவதாகவும் அதன் பின்னர் இந்த விவாதம் தொடர்பாக நாங்கள் கதைக்கவும் மாட்டோம் விமர்சிக்கப்போவதும் இல்லை என தேசிய மக்கள் சக்தி அரசியல் சபை உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

## இந்தோனேசியாவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(Tropical Belt Initiative), நீலப் பொருளாதாரம் (Blue Economy) கடற்பாசி தொழில் துறை குறித்துப் பேசப்பட்டது.

அதேபோல், தென்துருவ நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு, சதுப்புநிலப் பயிர்ச்செய்கை தொடர்பான ஒத்துழைப்புவேலைத்திட்டத்திற்காக ஆராய்ச்சி ஒத்துழைப்பு உள்ளிட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

ஒருங்கிணைக்க இருதரப்பு பணிக்குழுவை நிறுவுதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது. இந்துச் சமுத்திர எல்லை நாடுகள் (IORA) அமைப்பின் தற்போதைய தலைவராக இலங்கையின் வகிபாகம் உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

இந்தசந்திப்பில்இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி, நீர் வளங்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான், காலநிலை மாற்றங்கள் தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, இந்தோனேசியாவுக்கான இலங்கை தூதுவர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொழும்பகே, காலநிலை மாற்றங்கள் தொடர்பான செயலகத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரியும். சிரேஷ்ட மேலதிகச் செயலாளருமான வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# கிழக்குப் பல்கலை பொலிஸ் அடாவடிகள் மனித உரிமைகளுக்கு எதிரானது ஒன்றே

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

கிழக்கு பல்கலைகழக மாணவர்களின் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளை பொலிஸின் அநாகரீகமான அடாவடியான விதத்தில் குழப்பியமை குறித்து யாழ்.பல்கலைகழக மாணவர் ஒன்றியம் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளவை வருமாறு -

முள்ளிவாய்க்கால் தமிழினப்படுகொலை நினைவேந்தல்களைகிழக்குப்பல்கலைக்கழக மாணவர்கள் சனிக்கிழமை முன்னெடுத்துக் கொண்டிருக்கையில் பொலிஸ் அநாகரீக மற்றும் அடாவடியான செயற்பாடுகள் ஊடாக மனித உரிமைகளிற்கு எதிராக நினைவுகூரல் உரிமையை மறுக்கின்ற சிறிலங்கா அரசின் செயலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சிறிலங்கா பொலிஸ் அடாவடியென்பது அண்மைக்காலங்களில் பெருமளவில் அதிகரித்திருப்பது இங்கே சுட்டிக்காட்டப்பட வேண்டியுள்ளது. கடந்த 27.11.2023 அன்று மாவீரர் நாள் நிகழ்வுகளை சிறிலங்கா பொலிஸ் அத்துமீறி பல்கலைக்கழக முதன்மை வளாகத்தினுள் நுழைந்து குழப்பங்களை ஏற்படுத்தி தடுத்து நிறுத்தியிருந்ததோடு, சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கை நிறுவக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த நினைவேந்தல் வளைவை அகற்றிச் சென்றமையையும் இங்கே பதிவு செய்ய வேண்டும்.

தமிழர் தாயகத்தில் கேள்விக்குள்ளாக்கும் நினைகூரும் உரிமை தொடர்பில் கடந்த 16.05.2024 (வியாழக்கிழமை) அன்று வெளியிட்ட அறிக்கையில் கிழக்கு மாகாணத்தில் முடிவற்றுத் தொடரும் இதுபோன்ற நினைவேந்தல்களைத் தடுக்கும் மற்றும் அச்சுறுத்தும் செயற்பாடுகள் தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தனது அவதானிப்பைச் செலுத்தியிருந்தது.

கிழக்குப்பல்கலையில்தமிழ்மாணவர்கள் தமது பெரும்பாண்மையை இழந்துள்ள நிலையில், தமிழ் மக்களின் உரிமைக்கான பயணத்தில் எம்மோடு தோளோடு தோள் நின்று பயணிக்கும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களின் தொடர்ச்சியானதும் தன்னெழுச்சியானதுமான செயற்பாடுகளைத் தடுக்கும் செயற்பாடுகளின் அங்கமே இதுபோன்ற விதிகளிற்குப் புறம்பான ஒடுக்குமுறைகளின் நோக்கமாகும்.

கிழக்குப்பல்கலைக்கழக மாணவர்களின் காத்திரமான முன்னோக்கிய பயணங்களிற்கு பிராந்தியத்தின் சிவில் சமூகங்களும் செயற்பாட்டாளர்களும் பக்கபலமாகத் திகழவேண்டும் என்பதோடு,'பல்கலைக்கழகத்தைசமூகத்தினுள்ளும் சமூகத்தை பல்கலைக் கழகத்தினுள் கொண்டுசெல்வதுமே' பொருத்தமான வழியாகும் என்பதைப் பதிவு செய்கின்றோம்.(05)

கரையோர மீனவர்கள் சந்திப்பு;

# எங்கள் குழந்தைகள் தொழில்நுட்பம் பயின்ற மீனவர்களாக வலம் வரட்டும்

## எஸ்.எம். சபீஸ் தெரிவிப்பு



(நூருல் ஹுதா உமர்)

கொட்டும் மழை என்றும் பாராமல் பலர் அங்கு வந்திருந்தமை இதில் கருத்து தெரிவித்த எஸ்.எம்.சபீஸ் பெரும் வளமான கடற்பரப்பையும் நிலஅமைவையும்கொண்டுள்ளநாம்மீனவர்கள் என்றால் பின்தங்கியவர்கள், வருமானங்கள் குறைந்தவர்கள் என்ற தொன்மையோடு வாழ்ந்து மரணித்துவிட முடியாது. இதனை மாற்றியமைக்க வேண்டும் என்றால் நமது குழந்தைகள் சிறந்த தரத்திலான கல்வி அறிவோடு மீன்பிடிப்பவர்களாக மாற்றம் பெறவேண்டும் என கிழக்கின் கேடயம் தலைவரும், அக்கரைப்பற்று அனைத்துப்பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் முன்னாள் தலைவருமான எஸ்.எம்.சபீஸ் தெரிவித்தார்.

நாம் துன்பத்தில் வாழ்வது மடமையாகும். இன்று உலகில் தொழில்நுட்ப வளர்ச்சி மூலம் கடலுக்கு சென்றவர்களை கண்காணிக்கும் முறை தொடக்கம் மீனினங்கள் எவ்விடத்தில் இருக்கின்றது என்பதை துல்லியமாக அறியும் முறைகள் உருவாகி பலதசாப்தங்கள் ஆகிவிட்டன. நாம் இன்னும் பழைமை வாதத்திலேயே இருந்து கொண்டிருக்கின்றோம்.

உலகமயமாக்களில் பலநாடுகளுக்கு மீன் ஏற்றுமதி பெரும் வருமானத்தை ஈட்டிக்கொடுக்கும் ஒன்றாக மாறிவிட்டது. கடலை அண்டிய பகுதிகளில் களஞ்சியங்களும் மீன் பதப்படுத்தி ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களும், புதிதாக மீன் குஞ்சுகளை உருவாக்கி கடலில்விடும் நடவடிக்கைகளும் முறையாக மேற்கொள்ளப்பட



அம்பாறை மாவட்ட மீனவர் அமைப்புக்கள் பல ஒன்றாக சேர்ந்து சபீஸ், தமது மீனவ பகுதிக்கு அழைத்து சந்தித்திருந்தனர். இதன்போது மீனவர்கள் மத்தியில் உரையாற்றிய அவர், தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில் -

மனிதனுக்கு தேவையான 80 சதவீதமான புரதசத்து மீனில் இருந்து கிடைக்கின்றது. அதனை கஸ்டப்பட்டு கரைக்கு கொண்டு வருகின்ற வேண்டும். அதற்கு என்ன கஷ்டம் ஏற்படினும் நமது குழந்தைகள் தொழில் நுட்ப கல்விகளை முறையாகக் கற்க தியாகம் செய்யுங்கள்.

இதன் மூலமே இன்னும் 10 வருடத்திலாவது எமது மீனவ சமூகம் வருமான வழிகளிலும் புதிய தொழில்களை உருவாக்கி தொழில் வழங்குனர்களாக மாறவும் முடியும் எனத் தெரிவித்தார்.(05)

# பொது அபிலாசைகளை வெளிக்கொண்டுவரும் வகையில் ஒன்றிணைந்து நடந்துகொள்வோம்

## வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களிடம் விக்கி கோரிக்கை



வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து எமது பொது அபிலாஷைகளை வெளிக்கொண்டுவரும் விதத்தில் நடந்துகொள்வோம் என்று தமிழ் மக்கள் கூட்டணி செயலாளர் நாயகமும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் அவலத்தின் 15ஆவது ஆண்டு நினைவேந்தல் சனிக்கிழமை விக்னேஸ்வரனின் யாழ்.இல்லத்தில் நடைபெற்றதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இராமாயணம், மகாபாரதம் போன்ற காவியங்களில் தர்மவழி நின்றவர்கள் 14 வருடங்கள் அடங்கிப் போனார்கள். 15 ஆம் ஆண்டில் அவர்கள் எழுச்சி பெற்றதைப் பார்க்கின்றோம்.

அதேபோல் எமது தமிழ் உறவினர்களிடையே உணர்வுபூர்வமான எழுச்சியை வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும், கொழும்பிலும் இன்னும் சில இடங்களிலும் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

எமது புலம் பெயர் உறவுகள் நாட்டுக்கு நாடு நின்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை மனதில் நிறுத்தி இந் நாளை ஒரு கரிநாளாகக் கருதி நிற்கின்றனர்.

14 வருட எமது வனவாச காலம் முடிவுக்கு வந்துள்ளது. இவ்வருட நினைவேந்தல் வாரமும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளரை நிறுத்தும் கால கட்டமும் இணைந்து வந்துள்ளன. எம் சார்பில் உலகில் பல நாடுகள் குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளன. எமது அரசியல் கட்சிகள் ஒன்று சேர்ந்து பொது வேட்பாளரை ஆதரிக்க முன் வந்துள்ளன.

அரசாங்கம் கூட நினைவேந்தலைத் தடைசெய்யக்கூடாது என்ற முடிவுக்கு வந்துள்ளது. இனஅழிப்பு பற்றிய எமது ஆங்கில நூல் இக்கால கட்டத்திலேயே வெளிவந்துள்ளது. தமிழரின் விடிவு காலம் இவ் வருட நினைவேந்தல் தீபச் சுடரின் மத்தியில் பிரகாசமாக ஒளிர்வதை நான் காண்கின்றேன்.

எம்மக்கள் இனியும் வாளாதிருக்கக்கூடாது. வடக்குக் கிழக்கு தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து எமது பொது அபிலாஷ்ஷகளை வெளிக் கொண்டுவரும் விதத்தில் இனியேனும் நடந்து கொள்வோமாக. இவ்வருடம் உள்நாட்டு, வெளிநாட்டு தமிழ் உறவுகளின் வாழ்வில் ஒரு முக்கியமான வருடமாகப் பரிணமிக்கட்டும். - என்றார். (05)

# மு.கா. கல்முனை கிளை புனரமைப்புக் கூட்டம்









(கே எ ஹமீட்)

இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தலைவரும், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி செயலாளர் மன்சூர் ஏ காதர், பிரதி தேசிய அமைப்பாளரும், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ்.உதுமாலெப்பை, அம்பாறை மாவட்ட குழுவின் செயலாளரும், முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான ஏ.சீ.சமால்டீன், முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினர் கலீலுர் ரஹ்மான் மற்றும் கட்சி முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# ஆரோக்கியமான அரசியலுக்கு முன்னகர்ந்து வாருங்கள்

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் மற்றும் இரு கட்சிகளின் பொருளாதாரக் குழுகள் இடையில் இடம்பெற இருக்கும் விவாதத்துக்காக நாள் குறிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

இரண்டு கட்சிகளின் பொருளாதார குழுக்களுக்கிடையிலான விவாதத்தை மே 27க்கும் 31க்கும் இடைப்பட்ட திகதி ஒன்றிலும் தலைவர்களுக்கு இடையிலான விவாதத்தை ஜூன் 3 முதல் 7 வரையான நாள்களுக்குள் ஒன்றிலும் நடத்துவதற்கு நடவடிக்கை எடுகப்பட்டுள்ளது. இது தொடர்பாக தேசிய மக்கள் சக்திக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

அத்துடன் இரண்டு கட்சிகளின் பொருளாதாரக் குழு மற்றும் தலைவர்களுக்கிடையில் இடம்பெறும் விவாதத்துக்குத் தேவையான இணைப்பு நடவழக்கைகளை மேற்கொள்ளுமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திடம் கோரியிருப்பதாகவும் விவாதத்துக்கான ஊடக நடவழக்கைக்கு அனைத்து ஊடக நிறுவனங்களுக்கும் அழைப்பு விடுப்பதாகவும் நளின் பண்டார தெரிவித்தார்.

இதேவேளை, தேசியமக்கள்சக்திமற்றும்ஐக்கியமக்கள் சக்தி ஆகிய கட்சிகளின் தலைவர்களுக்கிடையிலான விவாதத்துக்கானநாள்இன்றுமே20முழவடைவதாகவும் அதன் பின்னர் இந்த விவாதம் தொடர்பாக தாங்கள் கதைக்கவும்மாட்டோம்விமர்சிக்கவும்மாட்டோம்என்றும் தேசிய மக்கள் சக்தி அரசியல் சபை உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்திருந்த நிலையிலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் இந்த அறிவிப்பு வந்திருக்கின்றது.

இந்த விவாதத்திற்கான முதல் சவாலை தேசிய மக்கள் சக்திதான் விடுத்தது. பகிரங்க மேடைகளில் அந்தச் சவாலை ஏற்று விவாதத்திற்குத் தாங்கள் தயார் என்று ஐக்கிய மக்கள் சக்தித் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸவும் அவரது கட்சியினரும் தொடர்ந்து பேசி வந்தனர். அதுபோலவே தேசிய மக்கள் சக்தியும் இந்த விவாதத்திற்கு தாங்கள் தயார் என்றனர். ஆனால், விவாதத்திற்கு இரு தரப்பினரும் ஒரு நாளைக் குறிப்பிட்ட இணங்கி வருவதற்குப் பதிலாக, விவாதத்தைத் தவிர்க்கப் பார்க்கிறார்கள் என்று ஒருவர் மீது ஒருவர் குற்றஞ்சாட்டி அதையொரு அரசியலாக்கும் நிலையைத்தான் பார்க்க முழகிறது. இதைவிட மோசமான அரசியல் வேறொன்றும் இருக்கப்போவதில்லை.

கட்சிகளின் அரசியல் மற்றும் பொருளாதார நிலைப்பாடுகளை மக்கள் தெரிந்துகொள்வதற்கும் எதிர்க் காலச் சவால்களைத் தலைவர்கள் எப்பழக் கையாள்வார்கள் என்பதைத் தெரிந்துகொள்வதற்கும் இதுபோன்ற அரசியல் நேரழ விவாதங்கள் மிகவும் பயனுள்ளவை. அமெரிக்கா போன்ற நாடுகளில் இதுபோன்ற விவாதங்கள் மிக முக்கியமானவையாக உள்ளன. கட்சிகளினதும் தலைவர்களினதும் வெற்றி தோல்விகளைத் தீர்மானிப்பதில் இவை கணிசமான பங்கை வகிக்கின்றன. அதுபோன்ற ஆரோக்கியமான நிலை ஒன்று இலங்கையிலும் ஏற்படுத்தப்படுவதே விரும்பத்தக்கது. அதைவிடுத்து ஆளுக்காள் சவால் விடுத்து வாய்ச்சவடால் காட்டுவதைத் தவிர்த்தும் காலத்தை இழுத்தழத்து அதையே ஒருவர் மீது ஒருவர் குற்றஞ்சாட்டுவதற்கான அரசியலாகப் பயன்படுத்துவதையும் விடுத்து முறையான ஒரு விவாதத்தை நடத்தி அதனை மக்களனைவரும் பார்ப்பதற்கும் கேட்பதற்குமான வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படவேண்டும்.

இதன் மூலம் புதிய ஆரோக்கியமான கலாசாரம் ஒன்றை உருவாக்குவதற்கு சஜித் பிரேமதாசவும் அனுரகுமார திஸநாயக்கவும் முன்வரவேண்டும்.

# உக்ரைன் - ரஷ்ய போரில் கூலிப் படைகள்: உலகை உலுக்கும் தனியார் ராணுவங்கள்

ஐங்கரன் விக்கினேஸ்வரா

கூலிப்படைகளால் உக்ரைன்-ரஷ்ய போர்க் களம் மேலும் ஒரு புதிய ஆபத்தின் வளர்ச்சிப் போக்கை வெளிப்படுத்தி உள்ளது. அதுதான் தனியார்ராணுவகூலிப்படைகளின்எண்ணிக்கை வளர்ச்சியாகும்.

அண்மையில் ரஷ்ய - உக்ரைன் மோதலில் இலங்கையின் பதினாறு இராணுவத்தினர் உயிரிழந்துள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

தனியார் ராணுவ கூலிப்படைகளுக்கு வன்முறைகள் ஒருபொருட்டே இல்லை. கொடூரங்களைத்தவிர வேறு எதுவும் அவர்களுக்கு மீதம் இருக்காது. அதிக கூலி, அதிக கொடுமைகள் என்ற கோட்பாட்டில்தான் இந்தத் தனியார் ராணுவப்படைகள் செயல்படுகின்றன.

### இலங்கை இராணுவ கூலிப் படைகள்:

இலங்கையின் நூற்றுக்கணக்கான முன்னாள் படைவீரர்கள் உக்ரேனிய எல்லையிலுள்ள போர்க் களங்களில் உயிரிழக்கின்றனர் என்று, அங்கிருந்து தப்பிய முன்னாள் படைவீரர் ஒருவர் பரபரப்பு தகவலை தெரிவித்துள்ளார்.

இலங்கையிலிருந்து பலகுழுக்களால் வெளி நாட்டு வேலைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ள இலங்கையை சேர்ந்த 200க்கும் மேற்பட்ட முன்னாள்படையினர்இவ்வாறுஉயிரிழந்துள்ளனர்.

இதேஎண்ணிக்கையலானவர்கள்டொனெட்ஸ்க் (Donetsk) போன்ற பிராந்தியங்களிலுள்ள வைத்தியசாலைகளில்சிகிச்சைபெற்றுவருகின்றனர் எனவும் கூறப்படுகிறது.

உக்ரைன் - ரஷ்ய போர்க் களங்களிற்கு இலங்கையில் ஆட்களைச் சேர்ப்பது கடந்த


THREE SRI LANKANS SERVING IN UKRAINIAN MILITARY KILLED

Three former members of the Sri Lankan military, including Captain Ranish Hewage, who was the commander of the First Special Forces of The International Legion of Territorial Defence of Ukraine, or the Ukrainian Foreign Legion, were killed on Monday in a Russian military attack.

07.12.2023 Daily Mirror WORLD

மூன்று மாதங்களில் தீவிரமடைந்துள்ளது. இதே வேளை அங்கே போக ஒரு வாரத்திற்குள் கடவுச் சீட்டு வீசாவுடன் கிடைப்பதால், அடுத்த சில நாட்களில் அவர்கள் உக்ரேனிய எல்லைகளுக்கு அனுப்பப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கியூபா போன்ற இலத்தீன் நாடுகளில் இருந்தும் பெருமளவு கூலிப்படையினர் ரஷ்யாவில்காணப்படுகின்றனர்எனவும்தகவல்கள் தெரிவிக்கின்றன.

### இந்தியா - நேபாள கூலிப்படைகள்:

உக்ரைனில்தனியார்ராணுவகூலிப்படையில் சேர்வதற்கு உலகம் முழுவதும் இருந்து பலர் ஆர்வமாக இருக்கின்றனர் என்று செய்திகள் வெளிவருகிறது. குறிப்பாக இந்தியா, நேபாள நாட்டிலிருந்து ஏராளமான இளைஞர்கள்,, இத்தகைய தன்னார்வ இராணுவக் குழுவில் சேர்கிறார்கள் என்று ஓர் செய்தி வெளிவந்துள்ளது.

அவ்வாறு சேரக்கூடிய படையினருக்கு ஓராண்டுக்குப் பிறகு அந்நாட்டு குடியுரிமை வழங்கப்படும் என்ற சலுகை இருப்பதாகவும் அதனால், மேலும் பலர் சேருகிறார்கள் என்றும் தெரிகிறது.

நேபாள அரசு இது அவர்களுடைய தனிப்பட்ட தெரிவு, நாங்கள் என்ன செய்ய முடியும் என்ற வகையில் கையை விரித்துவிட்டது.

இந்திய அரசு, நேபாள வீரர்களை ராணுவத்தில் சேர்ப்பதை நிறுத்திவிட்டது மட்டுமல்ல, அக்னி பாத் என்ற பெயரால் நிரந்தர ராணுவ பணியை ஒழித்துக் கட்டியதும் இதற்கு முக்கிய காரணம் என்று கூறப்படுகின்றது. வேலைவாய்ப்பு அற்ற இளைஞர்கள் இதுபோன்று அண்டை நாடுகளின் கூலிப்படைகளில் இணைவது இந்தியாவுக்கு ஆபத்து என்று தெரிவித்துள்ளது.

### ரஷ்ய வாக்னர் கூலிப் படை

முன்புரஷ்யாவில்இயங்கியதனியார்ராணுவப் கூலிப்படையான வாக்னர் குழுவும் (Wagner Group), உக்ரைன் போரில் தீவிரமாகக் களமாடிய ஒரு கூலிப்படை. ஆனால் 2023 ஜூனில் தளபதி எவ்கேனி பிரிகோஷின் போர்க் களத்தில் இருக்கும் போதே ரஷ்ய இராணுவ தலைமைக்கு எதிராக கலகத்தை ஆரம்பித்தார்.

ஆயினும் 24 மணி நேரத்தில் அவர் அறிவித்த கலகம் முடிவுக்கு வந்தது. வாக்னர் குழுவின் கலகத்தை ரஷ்யாவின் அதிபர் விளாடிமிர் புடின் மக்களுக்கு எதிரான தேசத்துரோகம் என்று குற்றம்




சாட்டி, ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்படும், தூக்குத் தண்டனை உட்பட சட்ட ரீதியான அனைத்து கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுத்தார்.

உடனடியாக பிரிகோஷின் தனது கலகத்தை வாபஸ் வாங்குவதாக அறிவித்தார். போர்க் காலத்தில் இது ஒரு மோதலாக மாற வேண்டாம், அப்படிப்பட்ட மோதல் உக்ரைன் போரில் ரஷ்யாவிற்கு பின்னடைவை ஏற்படுத்தும் என்ற பின்புலத்தில் அவர் மீதான சட்ட நடவடிக்கை கைவிடப்பட்டு பெலாரஸ் நாட்டில் தஞ்சமடைய அனுமதிக்கப்பட்டார்.

ஆனால் அவர் டூலா (Tula) நகர விமான விபத்தில் கொல்லப்பட்டார். இந்தக் கலகத்தை அடுத்து விளாடிமிர் புடின் ரஷ்ய ராணுவத்தை ஒன்றுபடுத்தி இருப்பதுடன், மக்களின் ஆதரவையும் அதிகப்படுத்தி இருப்பதாக கள நிலவர தகவல்கள் தெரிவிக்கின்றன.

### அமெரிக்க 'பிளாக் வாட்டர்' கூலிப் படைகள்

பனிப்போர் முடிந்த பிறகு அமெரிக்காவில் தனியார் ராணுவ கூலிப்படைகள் எண்ணிக்கை மிக அதிகமாக பெருக்கப்பட்டது.

அமெரிக்காவில் பிளாக் வாட்டர் என்று சொல்லக்கூடிய தனியார் கூலிப்படை ராணுவம் தான் உலகத்தில் பெரியது. முன்னாள் ராணுவ அதிகாரி எரிக் பிரின்ஸ் என்பவரால் இக்கூலிப்படை ஆரம்பிக்கப்பட்டது.

நூறுக்கும் மேற்பட்ட தனியார் ராணுவ கூலிப்படைகள் அமெரிக்காவில் செயல்படுவது தெரிய வருகிறது. ஜி4எஸ் (G4S) என்ற தனியார் ராணுவகூலிப்படைஅமெரிக்காவின்பாதுகாப்புக்காக 125 நாடுகளில் கிளைகளை வைத்துள்ளது.

2006முதல்2008ஆம்ஆண்டுவரைஅமெரிக்க




தொழிலாளர்கள் மீது தாக்குதலுக்கும் அமெரிக்கா தலையீடுகள் செய்யக்கூடிய நாடுகளில் மக்கள் எதிர்ப்பை அடக்குவதற்கும் இந்தக் கூலிப்படை பயன்படுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்கப் படையினர் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்கிற பொழுது உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் பாதுகாப்பு அளிப்பதற்கான பொறுப்பு இந்தக் கூலிப்படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஆப்கானிஸ்தான், ஈராக் போரின் போதுதான் அதிகமான அளவு கூலிப்படைகள் பயன்படுத்தப் பட்டன. பிளாக் வாட்டர் படை அதிக பங்கை இந்த இரு நாடுகளிலும் செய்தது. 2003 ஆம் ஆண்டு ஈராக் நாட்டில் உள்ள அமெரிக்க ஆதரவு ராணுவத்திற்கும், காவல்துறைக்கும் இவர்கள்தான் பயிற்சி கொடுத்தார்கள்.

2020 ஆம் ஆண்டு மட்டும் தனியார் ராணுவ கூலி படைகளுக்கான அமெரிக்காவின் முதலீடு 224 பில்லியன் டொலர் ஆகும். ஆனால் 2030 ஆம் ஆண்டு இது 457 பில்லியன் டாலர் அளவிற்கு உயரும் என்று மதிப்பீடு செய்யப்படுகிறது.

அனேகமாகஒருநாட்டின்ராணுவத்திற்குசமமாக தனியார் ராணுவ கூலிப்படைகளும் இன்றைய

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

# உக்ரைன் - ரஷ்ய போரில் கூலிப் படைகள்:



தினம் உருவாகிவிட்டன அல்லது உருவாக்கப்பட்டுள்ளன என்றே கருதலாம்.

### ஈராக்கில் அமெரிக்க கூலிப்படை:

அமெரிக்காவின் பட்ஜெட்டில் 2001 ஆம் ஆண்டு கூலிப்படைக்கு 7,35,000 டாலர் ஒதுக்கப்பட்டது. 2005ஆம் ஆண்டில் 25 மில்லியன் டாலர்களாகவும் 2006 ஆம் ஆண்டு 600 மில்லியன் டாலர்களாகவும் இந்த பிளாக் வாட்டர் தனியார் ராணுவ கூலிப்படைக்கு ஒதுக்கப்பட்டது.

சராசரி ஒரு அமெரிக்க ராணுவப் படையினருக்கு தினசரி ஒதுக்கக்கூடிய தொகை 150 டாலரில் இருந்து 190 டாலர் வரைதான். ஆனால் இந்தக் கூலிப்படைக்கு தினசரி அமெரிக்க பட்ஜெட் ஒதுக்கியது 1200 டாலர்களாகும்.

ஈராக் நாட்டில் தூசூர் நகரத்தில் 17 பொதுமக்களை விசாரணையின்றி தூக்கில் போட்டார்கள். இதுபோன்ற எண்ணற்ற கொடூர செயல்களை இந்த கூலிப்படை ஈராக்கில் செய்தது.

ஈராக்கில் கைது செய்யப்பட்ட ராணுவத் தினரையும் பொது மக்களையும் கொடும் சித்திர வதைக்கு உள்ளாக்கினார்கள். ஆயுதக்கடத்திலிலும் கள்ளச்சந்தையில் ஆயுத விற்பனையிலும் இவர்கள் மிக முக்கிய பங்கு வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்ட பிறகு இந்தக் கூலிப்படை தனது பெயரை அகாடமி என்று மாற்றிக்கொண்டது.

வேறுசிலபணிகளையும்செய்வதற்கானஒப்பந்தங்களை எடுத்து தங்களுடைய கூலிப்படை குற்ற செயல்களை மறைத்துக் கொண்டார்கள். மற்ற நாடுகளில் அமெரிக்க ஆதரவுராணுவத்திற்கு பயிற்சிகொடுப்பது, ஆப்கானிஸ்தான், இஸ்ரேல், ஈராக் போன்ற நாடுகளில் உள்ள அமெரிக்க தூதர்களுக்கு பாதுகாப்பு அளிப்பது என்று இந்தக் கூலிப் படைகளுக்குப் பணிகள் ஒதுக்கப்பட்டன.

### ஆப்கானில் அமெரிக்க கூலிப்படை

மற்றொரு தனியார் ராணுவ கூலிப்படை டைன்கார்ப் (DynCorp) ஆகும். இதில் 24 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். ஆப்கானிஸ்தானத்திற்கும், ஈராக்கிற்கும் இந்த கூலிப் படையிலிருந்துதான் 10 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் அனுப்பப்பட்டார்கள்.

அமெரிக்காவின் சி.ஐ.ஏ மற்றும் எப்.பி.ஐ போன்ற நிறுவனங்கள் தமது பாதுகாப்பிற்கு 50 சதவீதம் இந்த தனியார் ராணுவ கூலிப்படையை நம்பித்தான் இருக்கிறது.

இந்தக் கூலிப்படை கிழக்கு ஐரோப்பாவில் போஸ்னியா நாட்டில் 2000ஆம் ஆண்டில் நடைபெற்ற போரைஒட்டி அனுப்பப்பட்ட பொழுது பாலியல் தொழிலில் ஈடுபடுத்துவதற்காக பெண்களையும் குழந்தைகளையும் விற்பனை செய்தது.தொடர்பாக ஆதாரப்பூர்வமாக பல புகார்கள் வந்த பிறகும் எந்த நடவடிக்கையும் இல்லை.

### போஸ்னியாவில் கொடூரம்

2001ஆம் ஆண்டு ஈக்வடார் நாட்டில் விவசாயிகளின் பயிர்கள்மீதுகளைக்கொல்லிமருந்துகளைதிருட்டுத்தனமாக வீசி விவசாயத்தை நாசம் செய்யும் பணிகளை இந்தக் கூலிப்படை நிறைவேற்றியது. இவர்கள் ஆப்கான் நாட்டில் இருந்த பொழுது குழந்தை விபச்சாரத்தை நடத்தினார்கள் என்றும் பெரும் குற்றச்சாட்டுகள் எழுந்தது.

அதேவேளை எம்.பி.ஆர்.ஐ. என்ற அமெரிக்க தனியார் ராணுவ கூலிப்படை 1995இல் குரோஷியா நாட்டில் இன அழிப்பு கொடுமைகளில் ஈடுபட்டது. அல்பேனியா நாட்டில் கிளர்ச்சியை ஏற்படுத்தி ஆட்சி கவிழ்ப்புக்கு இந்த படை உறுதுணையாக இருந்தன.

ஆப்கானிஸ்தான் மற்றும் போஸ்னியா நாடுகளில் இஸ்லாமியர்களுக்குளஇருந்தபடைப்பிரிவுக்குள்நுழைந்து சிஐஏ வழிகாட்டலின் அடிப்படையில் செயல்பட்டார்கள்.

### பிரித்தானிய எர்னிஷ் இன்டர்நேஷனல் கூலிப்படை

'ஏஜிஎஸ் டிபன்ஸ் சர்வீஸ்' (AGS Defence Services )என்ற தனியார் ராணுவ கூலிப்படை இங்கிலாந்தில் 2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்து ஈராக் போரில் ஈடுபட்டது.

போர் நடைபெறக்கூடிய இடங்களில் தூதரகங்களை பாதுகாக்கும்பொறுப்பைஇந்தக்கூலிப்படைஏற்றுக்கொண்டது. இங்கிலாந்தில் எர்னிஷ் இன்டர்நேஷனல் என்ற தனியார் ராணுவ கூலிப்படை ஈராக் நாட்டிற்கு அனுப்பப்பட்டு ஒரு குறிப்பிட்ட பகுதிகளில் கைதிகளை சித்தரவதை செய்யும் செயல்களில் ஈடுபட்டது.

அதிகமாக மனித உரிமை மீறலில் ஈடுபட்ட தனியார் ராணுவப் படை என்று குற்றச்சாட்டுக்கும் ஆளானது.

அதேவேளை நார்த் பிரிட்டிஷ் சர்வீஸ் (North British Services) லிமிடெட் என்ற தனியார் ராணுவப்படை பிரிட்டனில் ஆரம்பிக்கப்பட்டு அமெரிக்க தனியார் ராணுவ படையுடன் இணைந்து டொமினிகள் குடியரசில் பதிவு செய்தார்கள். இந்த தனியார் ராணுவ கூலிப்படை தற்போது உக்ரைனுக்கு அதிகமான கூலிப்படைகளை அனுப்பி உள்ளது.

இந்தக் கூலிப்படையில் மூன்று ஆயிரத்துக்கு மேற்பட்ட முன்னாள் பிரிட்டிஷ் ராணுவத்தினரும், பிரான்ஸ், அமெரிக்காவை சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள்.

2003 ஆம் ஆண்டில் ஆபிரிக்காவில் உள்ள லைபீரிய நாட்டில் அரசுக்கு எதிரான கலவரங்களுக்கு இந்த படை அனுப்பப்பட்டு உதவி செய்து அந்த அரசை தூக்கி எறியக் கூடிய வேலையை முடித்தது, அந்நிய நாட்டுக்குள் புகுந்து அப்பட்டமான முறையில் அரசுக்கு எதிரான செயல்களில் இறங்கினார்கள்.

அந்தநாட்டின்ஜனாதிபதியைசிஐஏகடத்திச்செல்வதற்கான சிறப்பு திட்டத்தை தயாரித்துக் கொடுத்தவர்கள் இந்த கூலிப்படையை சேர்ந்தவர்கள்தான், ஐநா சபையின் தலையிட்டால் அது நடைபெறவில்லை.

### ஆட்கடத்தலில் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் :

ரஷ்ய உக்ரைன் போரில் ஓய்வு பெற்ற இராணுவத்தினரைக் கூலிப்படையாகப் பயன்படுத்தி ஆட்கடத்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஓய்வுபெற்ற சிரேஷ்ட இராணுவ அதிகாரி உட்பட மேலும் பலர் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டுள்ளதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

தற்போது இலங்கை இராணுவத்தில் பொது மன்னிப்புக்காக சுமார் 15,000 பேர் விண்ணப்பித்துள்ளனர். 2024ஆம் ஆண்டு மார்ச் மாதம் சட்டவிரோதமான முறையில் இராணுவத்தை விட்டு வெளியேறியவர்களின் எண்ணிக்கை 357 ஆகக் காணப்பட்டது. அத்துடன் சட்டவிரோதமான முறையில் சேவையிலிருந்து விலகி மீண்டும் பணிக்குத் திரும்பியவர்களின் எண்ணிக்கை 799 என அறிவிக்கப்பட்டுள்ளது என அரசு அறிவித்துள்ளது.

சிவில் பாதுகாப்பு திணைக்களத்தில் கடமையாற்றி அங்கவீனமடைந்த அல்லது போரில் உயிரிழந்த இராணுவத்தினருக்கு 55 வயதுவரையில் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆயினும் பல முன்னாள் இராணுவத்தினர் கூலிப்படையாக அனுப்பப்படுவதற்கு, அரசின் உயர் அதிகாரிகளும் பொறுப்பு என்றே கூறப்படுகிறது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
◆ அன்பான வரவேற்பு
◆ தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
◆ இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
◆ இந்தியன் உணவுவகைகள்
◆ Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# பொத்துவில் தாண்டியடி பிரதேத்தில் மீண்டும் இலவச வைத்திய சேவை



(எம்.எம்.ஜெஸ்மின்)

பொத்துவில் தொகுதியின் அதிகஸ்டப்பிரதேசமானதாண்டியடி பொதுமக்களின்வேண்டுகோளிற்கிணங்க கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன்மற்றும்திட்டமிடல் வைத்திய அதிகாரி வைத்



தியர் எம்.சி.மாஹீர் ஆகியோரின் பணிப்புரையின் பேரில் திருக்கோவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் பீ.மோகனகாந்தன் அவர்களால் திருக்கோவில் ஆதார வைத்தியசாலையின் உதவியுடன் தாண்டியடி பி.எம்.சி.டி. மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு வைத்திய சேவைகள் நடைபெற்றன.

இவ் வைத்திய சேவை வாரத்தில் இரு நாள்கள் செவ்வாய் மற்றும் சனி ஆகிய நாள்களில் காலையில் ஆரம்பிக்கப்பட்டு நண்பகல் வரை நடைபெறும் என திருக்கோவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி மோகனகாந்தன் தெரிவித்தார். (05)

# திருக்கோவில் ஆதார வைத்தியசாலை கிளையின் உத்தியோகபூர்வ மேலங்கி அறிமுக நிகழ்வு-2024



(கே எ ஹமீட்)

திருக்கோவில் ஆதார வைத்தியசாலை சங்கக்கிளையின் உத்தியோகபூர்வ மேலங்கி அறிமுக நிகழ்வு சனிக்கிழமை சங்கத்தின் தலைவி திருமதி வி.லோகிதா தலைமையில் வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் மிக விமர்சையாக நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா ஜனரஜ சுகாதார சேவவைகள் சங்க கிழக்கு மாகாண கிளைச்சங்க தலைவர் எஸ்.எ.உமீர் அவர்களும் சிறப்பு அதிதிகளாக வைத்தியசாலையில் கடமை புரியும் தாதிய பரிபாலகி திருமதி மேகலாதீபன் மற்றும் சங்கத்தின் அம்பாறைமாவட்ட பிரதம ஏற்பாட்டாளர்களான எஸ்.எம். இத்ரீஸ் மற்றும் எம்.எ.எம்.ஜெலீல்,எம்.வி. நசீர் அவர்களும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

மேலங்கியை உத்தியோகபூர்வமாக அறிமுகம் செய்ததுடன் கேக் வெட்டி நிகழ்வை சிறப்பித்ததுடன் அங்கத்தவர்களுக்கு மேலங்கியை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.(05)







## முதலில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஓகஸ்ட் முதல்வாரத்தில் நாடாளுமன்றத்துக்கான தேர்தல் நடத்தப்படவுள்ளது.

இதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதற்குரிய ஆதாரங்களுடனான சாட்சியங்கள் எனக்கு கிடைத்துள்ளன. அந்த வகையில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் தேசிய தேர்தல் ஆணைக்குழுவிற்கு கிடைக்கும் என்றார்.

## மக்களால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றம் எப்போது கலைக்கப்படும் என்பது தற்போதைய பிரதான பேசுபொருளாகக் காணப்படுகிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், பொருளாதார பாதிப்புக்கு பொறுப்புக்கூற வேண்டிய பஸில் ராஜபக்சவுக்கும் இடையில் தொடர்ச்சியாக பேச்சு நடக்கின்றது.

நாடாளுமன்றத்தைக்கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. இருந்தாலும் பதவிக்காலம் நிறைவடையும் வரை பதவியில் இருக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற்சிப்பாரே தவிர பதவிகாலத்தை வரையறுத்துக்கொள்ளமாட்டார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத்தைக் கலைத்தால் ஜனாதிபதிக்கு அதனால் எவ்வித பயனும் கிடைக்காது. அப்படிக் கலைத்தால் ஜனாதிபதி வசமுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களான பிரசன்ன ரணதுங்க, காஞ்சன விஜேசேகர, செஹான் சேமசிங்க உட்பட பெரும்பாலானோர் ஜனாதிபதியை விட்டு மீண்டும் பொதுஜன பெரமுன பக்கம் செல்வார்கள்.

பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி போட்டியிட்டால் அது ஜனாதிபதி தேர்தலுக்கும் செல்வாக்கு செலுத்தும். பொதுத் தேர்தலின் பெறுபேறுகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மக்களாணையின் பலத்தை உறுதிப்படுத்தும். ஆகவே பொதுத்தேர்தலுக்கு சென்றாலும் செல்லாவிட்டாலும் ஜனாதிபதி நெருக்கடிக்குள்ளாவார்.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலை நடத்தும் தேவை பஸில் ராஜபக்சவுக்கு உண்டு. ஜனாதிபதி தேர்தலில் களமிறக்க வேட்பாளர் ஒருவர் ராஜபக்சக்களிடம் இல்லை என்பதால் அவர்கள் பொதுத்தேர்தல் குறித்து அக்கறை கொண்டுள்ளார்கள்.

ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொது ஜன பெரமுனவின் ஆதரவுடன் வெற்றி பெற்றால் ராஜபக்சக்களின் அரசியல் அத்துடன் நிறைவடையும் என்பதை ராஜபக்சக்கள் நன்கு அறிவார்கள். பண்டாரநாயக்களின் அரசியல் செல்வாக்கை மஹிந்த ராஜபக்ச பெற்றுக்கொண்டதைத் தொடர்ந்து பண்டாரநாயக்கர்களின் அரசியல் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது,

இது போன்ற நிலை பொது ஜன பெரமுனவுக்கும் ஏற்படுமா என்ற அச்சம் ராஜபக்சகளுக்கு உண்டு. ஆகவே ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதை ராஜபக்ச குடும்பம் விரும்பவில்லை.

பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்புக் கூற வேண்டிய ராஜபக்சக்கள் மக்களால் விரட்டியடிக் கப்பட்டும் இன்றும் பாடம் கற்றுக் கொள்ளவில்லை. அரசமைப்பின் பிரகாரம் தேர்தல் இடம்பெற வேண்டிய நிலையில் தமது குடும்ப உறுப்பினர்களின் நலனுக்காகத் தேர்தல்களை நெருக்கடிக்குள்ளாக்க முயற்சிக்கிறார்கள்.

எந்த தேர்தல் முதலில் இடம்பெற்றால் தமக்கும், தமது குடும்பத்துக்கும் பயன் கிடைக்கும் என்பதை பற்றிச் சிந்திக்கின்றார்களே தவிர மக்களின் நிலைப்பாடு மற்றும் அரசியல் சிந்தனைகள் பற்றி ராஜபக்சக்கள் யோசிக்கவில்லை.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல் முறையாக நடத்தப்படும். ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் என்ற வேறுப்பாடில்லை. எந்தத் தேர்தலுக்கும் நாங்கள் தயார். வெற்றியோ, தோல்வியோ அதனை நாங்கள் எதிர்கொள்வோம். எந்தத் தேர்தலை முதலில் நடத்த வேண்டும் என்பதைப் பொது ஜன பெரமுன தீர்மானிக்குமாயின் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு எதற்கு? - என்றார்.

## படையினரைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றையும் அமைப்பார் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

மொனறாகலையில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நான் ஜனாதிபதியாகி 48 மணிநேரத்தில் பாதுகாப்பு படையினருக்கு தேவையான பொருளாதார தேவைகளைப் பூர்த்தி செய்யவும், அனைத்து நலத்திட்டங்களைப் பெற்றுக்கொடுக்கவும், அவர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் நோக்கில் ஜனாதிபதி விசேட செயலணிக் காரியாலயம் ஒன்று அமைக்கப்படும்.

அதேநேரம், நாட்டில் பயங்கரவாத்தினை ஒழிப்பதற்கு உதவினீர்கள். அத்துடன் உங்களது பணி முடிவடைந்துவிடவில்லை. நாட்டில் தற்போது ஊழல், மோசடிகள், நடைபெறுகின்றன. மெல்லமெல்ல நாட்டின் வளங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. இவ்வாறு நாடு சூறையாடப்படுவதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அதனை நோக்கிய பயணத்தில் நீங்களும் பங்காளிகள் ஆக வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

## ஒற்றையாட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடக அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் எந்தவொரு ஜனாதிபதித் தேர்தலிலும் சிங்கள பௌத்த வேட்பாளர்களே வெற்றிபெறக்கூடிய நிலையில் - அவர்கள் தமது வெற்றிக்காக - சிங்கள மக்களைத் திருப்திப்படுத்தும் வகையில் சிங்கள பௌத்த மேலாதிககத்தை உறுதிப்படுத்தும் ஒற்றையாட்சி அரசமைப்பைப் பேணிப்பாதுகாத்தல் என்ற கொள்கையை முன்கொண்டு செல்வதில் 'யார் வல்லவர்' என்னும் போட்டியில் ஈடுபடுகின்றனர். பிரதான வேட்பாளர்களது இனவாதக் கொள்கை நிலைப்பாட்டினை தமிழ்த் தரப்புக் கருத்திற் கொள்ளாமல், அந்த மூன்று 'வேட்பாளர்களுள் சிறந்தவர்களைத் தெரிதல்' என்ற மாயைக்குள் சிக்கி, தமிழர் நலன்களுக்கு எதிரான சிங்கள பௌத்த இனவாதக் கொள்கைக்குத் தமிழ் மக்களின் வாக்குகள் செல்கின்றமையானது, இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடாக இருப்பதனை தமிழ் மக்கள் ஆணை வழங்கி அங்கீகரித்துள்ளார்கள் என்பதாகவும் சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்களை நோக்கி நியாயமாக நடந்துகொள்கின்றார்கள் என்பதாகவும் உண்மைக்குப் புறம்பான செய்தியை மட்டுமே சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்தும்.

இந்த ஆபத்து நிலைமையை தமிழ் மக்கள் மாற்றியமைக்காதவரை தமிழினம் அடக்குமுறைக்குள் தாமே சிக்கிக்கொள்வதாகவும் - அவற்றிலிருந்து மீண்டெழமுடியாத நிலைமையும் தொடரும்.

தேர்தல் பகிஸ்கரிப்பு பொருத்தமற்றதெனவும், தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தவேண்டும் என்றும் சில தரப்புக்கள் கங்கணம்கட்டி நிற்கின்றார்கள். அவ்வாறு கூறுபவர்கள், தமிழ் மக்கள் தங்கள் வாக்குகளை சிங்கள வேட்பாளர்களுக்கு வழங்கக் கூடாதென்றும் - தமிழ் மக்களது அரசியல் வேணவாவை சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்துவதற்காகப் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்றும் கூறி மக்களை ஏமாற்ற முற்படுகின்றார்கள். தமிழ் மக்களது அபிலாசைகளைச் சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்துவதற்காகவே பொதுவேட்பாளரை நிறுத்தவேண்டுமெனக் கூறுபவர்கள் கடந்த 15 ஆண்டுகளில் எவ்வாறு நடந்துகொண்டார்கள்?

2010 நாடாளுமன்றத் தேர்தலில் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் சமஸ்டித் தீர்வு மற்றும் இனப்படுகொலைக்குச் சர்வதேச நீதி என்ற நிலைப்பாட்டிற்கு ஆணை கோரிப் போட்டியிட்ட தரப்புக்கு ஆதரவாக, தமிழ் மக்கள் பெருவாரியாக வாக்களித்து அறுதிப் பெரும்பான்மை ஆணையை வழங்கிப் 15 ஆசனங்களை வழங்கியிருந்தார்கள். அந்த ஆணைக்கு எதிராக 2012 ஆம் ஆண்டு ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளை நோக்கி தீர்வு விடயத்தில் இனநல்லிணக்கம் ஏற்பட மகிந்த ராஜபக்ச அரசின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உரிய முறையில் அமுல்ப்படுத்தினால் தமிழ் மக்களது அபிலாசைகள் நிறைவுசெய்யப்படும் என்றும் பொறுப்புக்கூறல் தொடர்பில் உள்ளக விசாரணையையுமே வலியுறுத்தியிருந்தார்கள்.

2015இல் தமிழ் மக்கள் வழங்கிய ஆணைக்கு எதிராக இனப்படுகொலைக்கு ஆதாரமில்லை என்றார்கள். ஐநா மனித உரிமைகள் பேரவையில் பொறுப்புக்கூறல் தொடர்பில் சர்வதேச விசாரணையைக் கைவிட்டு உள்ளக விசாரணைக்கு ஆதரவு வழங்கியிருந்தார்கள். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்குச் சர்வதேச நீதிவேண்டுமென வலியுறுத்தப்பட்ட நிலையில் இலங்கை அரசுடன் இணைந்து காணாமல்போனோர் அலுவலகத்தை உருவாக்கி (OMP) உள்ளகப் பொறிமுறைக்குள் முடக்கும் அரசின் கபட முயற்சிக்குத் துணைபோயிருந்தார்கள். இனப்பிரச்சினையைத் தீர்த்தல் என்ற போர்வையில் 'ஏக்கிய இராச்சிய' அரசியல் யாப்பு வரைபினை ரணில் - மைத்திரி அரசுடன் இணைந்து உருவாக்கி தமிழ் மக்களுக்கு வரலாற்றுத் துரோகமிழைத்தார்கள்.

போர்க் காலத்தில் தமிழ் மக்கள் தமது வரலாற்று வாழ்விடங்களிலிருந்து வன்முறைகள் மூலம் பலாத்காரமாக சிறீலங்கா அரசினால் வெளியேற்றப்பட்டிருந்தார்கள். ஆனாலும் போர் முடிவுக்குப் பின்னர் அந்த நிலங்களில் தமிழர்களை மீளக்குடியமர அனுமதி மறுக்கப்பட்டதுடன் அப்பகுதிகளில் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டார்கள். அவ்வாறு குறியேற்றப்பட்ட சிங்களவர்களுக்;குக் காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வுகளை அரசு முன்னெடுத்தபோது அந்நிகழ்வுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கலந்துகொண்டதன் மூலம் - திட்டமிட்ட சிங்கள மயமாக்கல் நிகழ்ச்சி நிரலை மூடிமறைப்பதற்கும், அது இயல்பான மீள்குடியேற்ற நடவடிக்கை அல்லது அபிவிருத்திச் செயற்பாடு என்றவாறான தோற்றப்பாட்டினை சர்வதேச மட்டத்தில் காண்பிக்கத் துணைபோனார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ரணில் - மைத்திரி ஆளும் தரப்பில் இதயத்தால் இணைந்திருந்த காலத்திலேயே - மட்டக்களப்பு மாவட்டத்தில் மயிலத்தமடு, மாதவனை மேச்சல்தரைப் பகுதியில் மாதுறு ஓயா வலது கரை அபிவிருத்தித் திட்டத்தினை ஆரம்பிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அதேவேளை அங்கு முழுமையான சிங்கள பௌத்த மயமாக்கலை ஏற்படுத்தும் நோக்கில் அந்த மேய்ச்சல் தரைப்பகுதியிலிருந்து தமிழ்ப் பண்ணையாளர்களை விரட்டியடித்து - மூன்று இலட்சம் கால்நடைகளை அழிவுக்குள் தள்ளி - சோளம் மற்றும் சிறுதானியப்பயிர்ச்செய்கையில் பெரும்பான்மையினத்தவர்களை அத்துமீறி ஈடுபடுத்தியபோதும் நல்லாட்சி என்ற பெயரில் ரணில் - மைத்திரி அரசுக்கு தொடர்ந்தும் முட்டுக்கொடுத்ததால் அப்பகுதியை ஆக்கிரமிக்கும் அரசின் செயற்பாட்டிற்குத் துணைபோயிருந்தார்கள்.

இனப்படுகொலையாளி கோட்டாபயராஜபக்ச நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக பதவியிலிருந்த நிலையில், 2021 தை 15ம் நாள் 'ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்குள் முடக்கப்பட்டிருந்த பொறுப்புக்கூறல் விவகாரத்தினை சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்த ஏதுவாக, ஐ.நா. செயலாளரை வலியுறுத்துமாறு கோரி' - ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்குத் தமிழ்த் தரப்புக்களால் கூட்டாகக் கையொப்பமிட்டு கடிதம் எழுதப்பட்டது. அக்கடிதத்தை மறுதலிக்கும் விதமாக அறுதிப் பெரும்பான்மை நாடாளுமன்ற ஆசனங்களைக் கொண்ட தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தாமே எனத் தெரிவித்து, உள்;ளக விசாரணையை வலியுறுத்தும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 46/1 தீர்மானம் எந்த வடிவத்திலேனும் நிறைவேற்றப்படவேண்டும் என்று வலியுறுத்தி - பொறுப்புக்கூறல் தொடர்பில் உள்ளக விசாரணைத் தீர்மானத்தை வலிந்து கோரியதன் மூலம் தமிழ் மக்கள் 2020 இல் நாடாளுமன்றத் தேர்தலில் வழங்கிய ஆணைக்கு எதிராகச் செயற்பட்டு இனப்படுகொலையாளிகளைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் தொடர்ந்தும் ஈடுபட்டார்கள்.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயத்தில் - ஒரு நாட்டுக்குள் இரண்டு தேசங்களாக வாழ்வதற்குரிய - இறைமை, சுயநிர்ணய உரிமை கொண்ட சமஷ்டித் தீர்வே தமிழ் மக்களின் அரசியல் அபிலாசையாகவும், புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கான நிரந்தரமான அரசியல்த் தீர்வாகவும் அமையமுடியும். 2009 இல் பெரும் தமிழ் இனவழிப்பு நடைபெற்றுள்ளதுடன், இன்றும் கட்டமைப்புசார் இனவழிப்பு செயற்பாடுகள் திட்டமிட்டு, வேண்டுமென்றே சிங்கள பௌத்த பேரினவாதத்தினால் மேற்கொள்ளப் பட்டுவரும் நிலையில் - ஒற்றையாட்சிக்குட்பட்ட எந்தவொரு முறைமையையும் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஆரம்பப்புள்ளியாகக் கருதமுடியாது.

ஆனால் - தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினராகிய எம்மைத் தவிர்ந்த ஏனைய அரசியல் தரப்புக்கள் 1987இல் தமிழ் மக்களால் நிராக்கப்பட்டிருந்த ஒற்றையாட்சிக்குட்பட்ட 13ஆம் திருத்தத்தையே, சர்வதேச சமூகத்தின் மத்தியில் தமிழருக்கான தீர்வாக 2009 இன் பின்னர் வலியுறுத்தி வந்துள்ளதுடன், கடந்த 2022 ஜனவரி 18 ஆம் நாள் - இந்தியப் பிரதமர் மோடிக்கும், அந்த நிலைப்பாட்டினையே வலியுறுத்தி எழுத்து மூலமான கடிதத்தை அனுப்பி தமிழர்களின் அரசியல் அபிலாசைகளுக்குத் துரோகமிழைத்திருந்தார்கள்.

கடந்த காலங்களில் இவ்வாறு துரோகமிழைத்தவர்கள்தான் மீண்டும் இன்று தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தவேண்டும் என்று கூறிவருகிறார்கள். தமிழ் பொது வேட்பாளர் என்ற பின்னணியின் உண்மையை உரசிப்பார்போமானால் - இரண்டாவது விருப்பு வாக்கை சிங்களப் பேரினவாத வேட்பாளர் ஒருவருக்கு செலுத்துவதற்காகவே தயார்ப்படுத்துகின்றார்கள். இந்த உண்மையை கிளிநொச்சியில் இடம்பெற்ற மேதினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன் தனது உரையில் வெளிப்படையாக ஒப்புக்கொண்டிருந்தார். இரண்டாவது வாக்கை சிங்கள வேட்பாளருக்கு வழங்குவதென்பதும் சிங்கள வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் நேரடியாக ஆதரிப்பதாகவே அமையும் என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அப்படியாயின் - தொடர்ச்சியாக தேர்தல்களில் பெற்றுக் கொண்ட மக்கள் ஆணைகளுக்கு மாறாக, ஒற்றையாட்சிக்குட்பட்ட தீர்வையும் உள்ளக விசாரணையையும் வலியுறுத்திவரும் தமிழ்த் தரப்புக்கள் கூட்டிணைந்து தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துவதற்கு மேற்கொள்ளும் முயற்சியானது உண்மையாகவே தமிழரின் அபிலாசைகளை வெளிப்படுத்த எடுக்கப்படும் முயற்சியா? அல்லது சிங்கள வேட்பாளர் ஒருவரை ஆதரிப்பதற்காக பின்கதவால் மேற்கொள்ளப்படும் சூழ்ச்சியா? என்பதிலும் தமிழ் மக்கள் தெளிவடைய வேண்டும்.

சிங்கள ஆட்சியாளர்கள் மீது முற்றுமுழுதாக வெறுப்படைந்து - விரக்தியடைந்து - ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு வேட்பாளரையும் ஆதரிப்பதால் பயனெதுவும் ஏற்படப்போவதில்லை என்ற மனோநிலையே மிகப் பெரும்பான்மையான தமிழ் மக்களிடம் காணப்படுகின்றது. எந்தவொரு பெரும்பான்மையின ஜனாதிபதி வேட்பாளரின் பெயரைக் குறிப்பிட்டும் அவருக்கு வாக்களியுங்கள் என்று கோர முடியாத அளவுக்கு அனைத்து சிங்களக் கட்சிகள் மீதும் வேட்பாளர்கள் மீதும் தமிழ் மக்கள் வெறுப்படைந்துள்ளார்கள்.

இவ்வாறான நிலையில் - பிராந்திய வல்லரசினதும் அதனுடன் கூட்டிணைந்து தமது பூகோள நலன்களை முன்னிலைப்படுத்திச் செயற்படும் சர்வதேச வல்லரசுகளதும் நலன்களைப் பேணுவதற்காக - ஒத்திசைந்து செயற்படக்கூடிய குறித்த வல்லரசுகள் விரும்பும் வேட்பாளர் ஒருவரை வெற்றிபெறவைப்பதனை இலக்காகக் கொண்டு, அந்த உண்மை நோக்கத்தை மக்களுக்கு மறைத்து, தமக்குத் தேவைப்படும் சிங்கள வேட்பாளருக்குத் தமிழ் மக்களைத் தமது இரண்டாவது விருப்பு வாக்கினைச் செலுத்த வைப்பதற்கான கபட முயற்சியையே 'தமிழ் பொது வேட்பாளர்' என்ற நாடகம் மூலம் அரங்கேற்ற முயல்கின்றார்கள்.

வரவிருக்கும் சிறிலங்கா ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களது வாக்குகளைப் பெறாமல் எவருமே வெல்லமுடியாத சூழலே உள்ளது. ஆனால், இப்படியான நிலையிருந்தும் எந்தவொரு ஜனாதிபதி வேட்பாளரும் தமிழ் மக்களுக்காக எதுவுமே செய்யத் தயாரில்லை என்பதே களயதார்தமாகும். தமிழ் மக்களுடைய வாக்கில்லாமல் எவருமே வெல்லமுடியாத ஒரு சூழலில் - தமிழ் மக்களின் வாக்குகளே 'யாரை வெல்லவைப்பது?, யாரைத் தோற்கடிப்பது?' என்றவொரு நிலை உள்ளபோது - தமிழ் மக்களைக் கணக்கில் எடுக்கவே தயாரில்லாத இந்தச் சிறிலங்கா ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிப்பின் ஊடாக மட்டுமே மிகச்சிறந்த செய்தியை தமிழ் மக்களால் வழங்கமுடியும்.

ஜனாதிபதித் தேர்தலைத் தமிழ் மக்கள் பகிஸ்கரிப்பதன் மூலம் மூன்று விதமான செய்திகள் உணர்த்தப்படும்.

1. இத் தேர்தல் மூலம் ஜனாதிபதியாக வருபவர், தமிழர்கள் தேர்தலைப் புறக்கணித்ததன் விளைவாகவே தன்னால் ஜனாதிபதியாக வெற்றிபெற முடிந்தது என்ற நிலைமையையும் - தோற்றவர்கள், தமிழ் மக்களின் தீர்வு தொடர்பாக நம்பிக்கையை கொடுத்திருந்தால் தங்களால் வென்றிருக்க முடியும் என்ற ஏக்கத்தை உருவாக்கும்.

2. தேர்தலில் வென்றவருங்கூட, தமிழ் மக்களின் வாக்குகள் இன்றி எதிர்காலத்தில் தன்னால் வெற்றிபெறமுடியாமல் போகும் என்ற உண்மையை விளங்கிக் கொண்டு செயற்படவேண்டிய அச்சத்தையும் உருவாக்கும்.

3. தமிழ் மக்கள் தமது வாக்குகளைத் தங்கள் இனநலன் சார்ந்தே இனிப் பயன்படுத்துவார்கள் என்பதும், இனியும் தமிழ் மக்களை வாக்களிக்கும் எடுபிடிகளாகப் பயன்படுத்த முடியாது என்ற காத்திரமான செய்தி பிராந்திய வல்லரசுக்கும் அதனுடன் இணைந்து செயற்படும் பூகோள ஆதிக்க சக்திகளுக்கும் அவர்களின் உள்ளூர் முகவர்களுக்கும் தெட்டத்தெளிவாக வழங்கப்படும்.

எனவே ஒற்றையாட்சி அரசமைப்பு நீக்கப்பட்டு சமஷ்டி அரசமைப்பு கொண்டுவரப்படல் வேண்டும் என்ற உறுதியான நிலைப்பாட்டுடன் தமிழர் ஒற்றுமையாக நிறைவேற்றப்போகும் இந்த ஜனாதிபதித் தேர்தல் புறக்கணிப்பினூடாக அரசியல் ரீதியாகவும் இராஜதந்திர ரீதியாகவும் ஏற்படுத்தப்படப்போகும் அழுத்தமானது தமிழினத்துக்கே பெரும் பலத்தை வழங்கும் என்ற உண்மையை விளங்கிக்கொண்டு செயற்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும் என்றுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# நீடித்த அரசியல் தீர்வின் முக்கியத்துவத்தை மௌனித்த பலகதைகள் வலியுறுத்துகின்றன

## அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவிப்பு



நீதி, சம உரிமைகள் மற்றும் சம வாய்ப்புகளை பெற்றுக்கொள்வதில் ஈடுபாட்டுடன் போராடும் இலங்கை மக்களின் உறுதியான பங்காளியாக அமெரிக்கா என்றும் இருக்கும் என்று தெரிவித்துள்ள அமெரிக்க தூதுவர் ஜூலி சங், மௌனிக்கப்பட்ட பல கதைகள் நீடித்த அரசியல் தீர்வின் அவசியத்தை வலியுறுத்துகின்றன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மூன்று தசாப்த கால போர் முடிவடைந்து 15 வருடங்கள் ஆகின்ற நிலையில், வடக்கு மற்றும் கிழக்கில் போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்து பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. இவ்வாறானதொரு நிலையில் வடக்குக்கு விஜயம் செய்திருந்த அமெரிக்க தூதுவர் ஜூலி சங், யாழ்ப்பாணத்தில் அரச மற்றும் சிவில் தரப்புகளை சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

குறிப்பாக உள்நாட்டுப் போரின்போது வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர், முன்னாள் போராளிகள் மற்றும் முன்னாள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டக் கைதிகளின் குடும்பங்களை சந்தித்து கலந்துரையாடியிருந்தார். அன்புக்குரியவர்களை நினைவுகூர அனைத்து குடும்பங்களுக்கும் உரிமை உண்டு என இதன்போது தெரிவித்திருந்த அமெரிக்க தூதுவர், மௌனித்த இவர்களின் கதைகள் நீடித்த அரசியல் தீர்வின் அவசியத்தை வலியுறுத்துகின்றன எனவும் குறிப்பிட்டார்.

இவ்வாறானதொரு நிலையில் இலங்கையின் உள்நாட்டுப் போர் முடிவடைந்து 15 ஆண்டுகளை நினைவுகூர்ந்து அமெரிக்க தூதுவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பக்க பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு -

இலங்கையின் உள்நாட்டுப் போர் முடிவடைந்து 15 ஆண்டுகளை நிறைவடைந்துள்ளது. ஐக்கியப்பட்ட எதிர்காலத்துக்கான பின்னடைவு மற்றும் நம்பிக்கையை பிரதிபலிக்கும் வகையில், அனைத்து இலங்கையர்களுடனும் அமெரிக்கா துணை நிற்கிறது. நீதி, சம உரிமைகள் மற்றும் சம வாய்ப்புகளை பெற்றுக்கொள்வதில் ஈடுபாட்டுடன் போராடும் இலங்கை மக்களின் உறுதியான பங்காளியாக அமெரிக்கா என்றும் இருக்கும்.

நிலையானசமாதானம்மற்றும்முன்னேற்றத்துக்கான பன்முகத்தன்மையை உள்ளடக்கிய வளமான எதிர்காலத்தைநோக்கியஇலங்கையின்பயணத்துக்கான அமெரிக்காவின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதி செய்கிறோம் என்று தெரிவித்துள்ளார்.(05)

# மலதெனியவில் ஒரே குடும்பத்தில் மூவர் கொலை: சந்தேகநபர் கைது

மலதெனிய பிரதேசத்தில் வீடொன்றில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரைக் கொன்ற சந்தேக நபரை நல்ல பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த கொலை சம்பவம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை நான்கு மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சைக்கிளில்சந்தேகத்திற்கிடமான முறையில் பயணித்த ஒருவரை பொலிஸார் சோதனையிட்ட போது அவரிடமிருந்து 3 லட்சம் ரூபா பணம் மற்றும் தங்க நகைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்படிசந்தேகநபரைக்கைது செய்து அவரிடம் மேற்கொள்ளப் பட்ட விசாரணையில் இந்த கொலைச் சம்பவம் தொடர்பில் தெரியவந்துள்ளதாகவும்பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த கொலைசம்பவத்தில்ஒரே குடும்பத்தைச்சேர்ந்தமூவர்இவரால் கொலை செய்யப்பட்டுள்ளனர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05)

# நேருக்கு நேர் மோதி இரு பஸ்கள் விபத்து

## 26 பேர் காயம்



கேகாலை - அவிசாவளை வீதியில் கொட்டபொல பிரதேசத்தில் இரண்டு பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கண்டியிலிருந்து அவிசாவளை



நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்று அதிக வேகத்துடன் பயணித்தமையாலும் கவனக்குறைவாக மற்றுமொரு வாகனத்தை முன்னோக்கிச் செல்ல முயன்றமையாலும் இந்த விபத்து இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

விபத்தின் போது 26 பேர் காயமடைந்துள்ள நிலையில் கேகாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களில் பஸ் சாரதியொருவரின் நிலைமையும் பெண் ஒருவரின் நிலைமையும் கவலைக்கிடமாக உள்ளதாகவைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.(05)

# இனப்படுகொலையை நிராகரிக்கும் இலங்கை அரசு திட்டமிட்டு பிழையான தகவல்களை பரப்புகின்றது

## பிரம்டன் மேயர் பட்ரிக் பிரவுன் தெரிவிப்பு

இனப்படுகொலையை நிராகரிக்கும் இலங்கை அரசாங்கம் சர்வதேச தலையீடுகளில் ஈடுபடுவதுடன் திட்டமிட்டு பிழையான தகவல்களை வெளியிடுதல் பரப்புதல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ளது என கனடா பிரம்டன் மேயர் பட்ரிக் பிரவுன் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழ் இனப்படுகொலை தினம் என குறிப்பிடப்படும் முள்ளிவாய்க்கால் படுகொலையின் 15 வருடத்தை இன்றைய தினம் குறிக்கின்றது என பட்ரிக் பிரவுண் குறிப்பிட்டுள்ளார்.

2009 ஆம் ஆண்டு ஆயுதமோதலின் இறுதி தருணங்களில் அரச ஆதரவுடன் இடம்பெற்ற இனப்படு கொலையில் பலியானவர்கள் உயிர்பிழைத்தவர்களை உலகம் முழுவதிலும் உள்ள தமிழர்கள் நினைவுகூரும்









இந்த தருணத்தில் நான் எனது ஆதரவை அவர்களிற்கு வெளியிடுகின்றேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த குற்றங்களிற்கும் யுத்தத்தின் போதும் அதன் பின்னரும் இடம்பெற்ற வலிந்து காணாமலாக்கப்பட்ட சம்பவங்களிற்கும் கண்மூடித்தனமான தடுத்துவைத்தல் சித்திரவதைகள் நீதி பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கான எந்த நேர்மையான நடவடிக்கைகளையும்இன்றுவரை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனை விட மோசமான விடயம் என்னவென்றால் இடம்பெற்ற இனப்படுகொலையைநிராகரிக்கும்இலங்கை அரசாங்கம்சர்வதேசதலையீடுகள்திட்டமிட்டு பிழையான தகவல்களை வெளியிடுதல் பரப்புதல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)

# 13 ,752 கஞ்சா செடிகளுடன் ஹம்பேகமுவயில் ஒருவர் கைது

ஹம்பேகமுவ பொலிஸ் பிரிவிற்குப்பட்ட பலுப்பிட்டிகன்த பிரதேசத்தில் 13,752 கஞ்சா செடிகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலம்பகேயார பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயது நபரொருவரே இவ்வாறுகைதுசெய்யப்பட்டுள்ளார்.

விசாரணையில் சந்தேக நபரிடமிருந்து 13,752 கஞ்சாசெடிகள்கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹம்பேகமுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# பாலியல் சமத்துவம் மற்றும் மகளிர் கொள்கைகள் மற்றும் உரிமைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்வு





தொழிற்சாலைகள் மற்றும் தொழில் தளங்களில் பணிபுரியும் இளைஞர் யுவதிகளுக்கான பாலியல் சமத்துவம் மற்றும் பெண்களுக்கான கொள்கைகள், உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு ஒன்று மட்டக்களப்பு நாவற்குடா சிவநேசராசா உள்ளக அரங்கில்'பெண்களுக்காக நாம்' அமைப்பில் ஏற்பாட்டில் சனிக்கிழமை அமைப்பின் இணை நிறுவனர் பாஹீம் இஸ்மாயில் தலைமையில் இடம்பெற்றது.



இவ்விழிப்புணர்வு கருத்தரங்கு நிகழ்விற்கு வளவாளர்களாக சமூக செயற்பாட்டாளர் ஜே.எம்.அஸீம் மற்றும் சமூகப்பணி மற்றும் கலைமானி பட்டப்படிப்பு மாணவர் எம்.பீ.எம்.றிப்னாஸ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பான தெளிவூட்டலை கலந்து கொண்ட இளைஞர் யுவதிகளுக்கு வழங்கினர்.

தொழிற்சாலை மற்றும் தொழில்புரியும் நிலையங்களில் பெண்களுக்கான வன்முறைகள்,பாலியல் சேட்டைகள், அச்சுறுத்தல்கள், ஊதியம் மறுக்கப்படல்,அடிப்படை உரிமைகள் நசுக்கப்படல் போன்ற விடயங்களுக்கு ஆளாகும் போது சட்டரீதியாக எவ்வாறு தீர்வினை பெற்றுக்கொள்ள முடியும் இவ்வாறான சந்தர்ப்பங்களில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற விடயங்கள் வளவாளர்களால் விரிவாக எடுத்துரைக்கப்பட்டன.

கடந்த இரண்டாயிரத்து இருபத்து மூன்றாம் ஆண்டு மார்ச் எட்டாம் திகதி சர்வதேச பெண்கள் தினத்தன்று மகளிர் ,சிறுவர் அலுவல்கள் மற்றும் பெண்களின் வலுவூட்டல் பற்றிய தேசிய கொள்கை இலங்கையில் பிரகடனம் தொடர்பான விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி முப்பதுக்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகள் மற்றும் தொழிற்துறைகளில் ஈடுபடுவோரும் கலந்து கொண்ட மேற்படிவிழிப்புணர்வுகருத்தரங்கில்தான்எதிர்காலத்தில் எவ்வாறான நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் என்ற அறிவை தாம் பெற்றுக்கொண்டதாக கலந்து கொண்டோர் தெரிவித்தனர்.

பெண்களுக்காக நாம் அமைப்பு தேசியரீதியில் இன்னும் பல தொடரான சமூகத்திற்கு பயன் அளிக்கக் கூடிய விழிப்புணர்வு நிகழ்வுகளை முன்னெடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(05)

# எலான் மஸ்க்கைச் சந்தித்தார் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க



இந்தோனேசியாவில் நடைபெறும் 10ஆவது உலக நீர் உச்சி மாநாட்டின் உயர்மட்ட அமர்வுடன் இணைந்து இலங்கையில் ஸ்டார்லிங்க் சேவை வசதியை அமுல்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதிரணில்,உலகப்புகழ்பெற்ற வர்த்தகரான எலான் மஸ்க்கை நேற்று(ஞாயிற்றுக்கிழமை)சந்தித்து கலந்தாலோசித்தார்.

இதன்போது மேற்படி செயன்முறையில் இணைவதற்கான விண்ணப்ப செயல்முறையை விரைவுபடுத்துவது குறித்து ஆராயப்பட்டது.அதைதொடர்ந்து,இந்தோனேசியாவின் கடல்சார் விவகாரங்கள் மற்றும் முதலீடுகளுக்கான ஒருங்கிணைப்புஅமைச்சர்லுஹூத்பின்சார் பண்ட்ஜாய்டனையும் ஜனாதிபதி சந்தித்தார்.(05)



# தொழில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு நடமாடும் சேவை நுவரெலியாவில்



தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் ஏற்பாட்டில் நுவரெலியாவில் கடந்த 17 மற்றும் 18 ஆம் திகதிகளான இரண்டு நாள்களிலும் மக்கள் நடமாடும் சேவை ஏற்படுத்தப்பட்டிருந்தது.





நுவரெலியாவுக்கு 'மாதிரி சிமாட் எதிர்காலம்' எனும் தொனிப்பொருளில் மக்கள் நடமாடும் சேவை இடம்பெற்றது.

நுவரெலியா மாநகர சபை (சினி சிட்டா) பொது மைதான மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்த சேவையின் முதல் நாள் நிகழ்வு கலை, கலாசார முறைப்படி சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

இதன் ஆரம்ப நிகழ்வில் நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்திஅமைச்சர்ஜீவன்தொண்டமான், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.பி.திசாநாயக்க, சீ.பீ. ரத்நாயக்க, நிமால் பியதிஸ்ஸஉள்ளிட்டஅரசியல்பிரமுகர்களும் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

மேலும், கலை, கலாசார நிகழ்வுகள், பரிசளிப்பு மற்றும் சான்றிதழ்கள் வழங்கல் இடம்பெற்றன.

இந்தநிகழ்வில்தொழில்திணைக்களம்,வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், இலங்கை மத்திய வங்கி, ஊழியர் நம்பிக்கை நிதியம், தொழிற்பயிற்சி நிலையங்கள், தேசிய தொழில்சார் கற்கை நிறுவனம், தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனம் ஆகியவற்றுடன் அரச வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள், அனுமதி பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள், சிறு தொழில் அபிவிருத்திப் பிரிவு, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு ஆகியவற்றின் ஊடாக பெற்றுக்கொள்ளக்கூடிய சேவைகள் என 12 சேவைகள் இந்த நடமாடும் சேவையில் இலவசமாக வழங்கப்பட்டது.

இந்தஇலவசசேவைகளைபாடசாலைமாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள், பொது மக்கள் என பலரும் பெற்றுக்கொண்டனர். (05)



# சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம்



(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் மீரா நகர் கிராம சேவகர் பிரிவை சேர்ந்த எஸ்.எம்.எம்.நஸீர் தீவு முழுவதுக்குமான சமாதான நீதிவானாக திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில்அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

தம்பலகாமம் பிரதேச செயலகத் தில் அலுவலக உத்தியோகத்தராக கடமையாற்றும் இவர் ; சீனக்குடா விமானப்படையகத்தின் முன்னாள் ஊழியருமாவார். (05)

# ஜனாதிபதியின் வடக்கு வருகை குறித்த ஆயத்த கலந்துரையாடல்



ஜனாதிபதியின்வடக்குமாகாண விஜயம்தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில்நேற்று(ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் தலைமையில் இந்த கலந்துரையாடல் நடைபெற்றது.

பாதுகாப்பு பிரிவினர், பொலிஸார், மாவட்ட அரசாங்க அதிபர்கள் உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள் பலரும் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதியால் வடக்கில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள், திட்டங்களுக்கு பொறுப்பான துறைசார்அதிகாரிகளின்கடமைகள், பாதுகாப்பு நடைமுறைகள், நிகழ்ச்சி நிரல் திட்டமிடல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன. (05)

# மலையகத்தில் வாழும்கலை அமைப்பின் செயற்பாட்டை ஆரம்பிக்க உதவுவேன்

## நுவரெலியாவில் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் உறுதி





இலங்கையில் மலையகத்திலும் வாழும் கலை அறக்கட்டளை நிறுவக செயற்பாடுகளை ஆரம்பிக்க இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முன்வைத்த வேண்டுகோளுக்கு உதவுவேன் என ஆன்மிக குருவும் அமைதி தலைவரும், வாழும் கலை பயிற்சி அறக்கட்டளை நிலையத்தின் தாபகருமான ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் நுவரெலியாவில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை இடம்பெற்ற விசேட சந்திப்பில் கலந்துகொண்டு தெரிவித்தார்.



இலங்கையில் வரலாற்று சிறப்பு மிக்க நுவரெலியா-சீத்தாஎலியபிரதேசத்தில்அமைந்துள்ள சீதையம்மன் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை வெகு விமர்சையாக நடைபெற்றது.

இந்த மஹா கும்பாபிஷேக நிகழ்வில் கலந்து கொள்வதற்காக இந்தியாவில் இருந்து ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு சனிக்கிழமை வருகைதந்தார்.

அவர் நேற்று நுவரெலியாவுக்கு விஜயம் செய்து, நுவரெலியா சீதையம்மன் ஆலய மஹா கும்பாபிஷேக சாந்தியில் கலந்து சிறப்பித்து ஆசியும் வழங்கினார்.

அதன் பின் நுவரெலியா 'கிறேன்ட் ஹோட்டல்' சுற்றுலா விடுதிக்கு விஜயம் செய்த ரவிசங்கர், அங்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளரும் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி நீர் வளங்கள் அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப் பட்டிருந்த விசேட சந்திப்பிலும் கலந்துகொண்டார்.

இந்த சந்திப்பில் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் காங்கிரஸின் தவிசாளருமான மருதபாண்டி ராமேஷ்வரன், பி.இராஜதுரை பாரத் அருள்சாமி உள்ளிட்ட இ.தொ.கா உயர்பீட உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

இந்த சந்திப்பில் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கரிடம் இலங்கையில் மலையக மக்களின் நலத்திட்டத்துக்காக பல கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன.

இவ்வாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட ரவிசங்கர், வாழும் கலை அறக்கட்டளைஅமைப்பின்செயற்பாட்டைமலையகத்திலும் பலப்படுத்த ஒத்துழைப்பு வழங்குவதாகவும், பயிற்சி நிலையங்களை ஆரம்பிக்க இடங்கள் உள்ளிட்ட வசதிகளை எதிர்பார்ப்பதாகவும் இதற்கான உதவிகளை தனது அறக்கட்டளை நிறுவகம் ஊடாக வழங்குவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன்,ஆன்மிககற்கைநெறிபாடசாலைகளை ஆரம்பித்தல், வாழும் கலை பயிற்சிகள், பெண்களுக்கான சுய தொழில் ஊக்குவிப்புகள் உள்ளிட்ட பல்வேறு உதவிகளை தனது அறக்கட்டளை ஊடாக செய்து தருவதாகவும் உறுதியளித்தார். (05)

# கல்முனையில் ஹரீஸின் பங்கேற்புடன் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி புனரமைப்பு



(நூருல் ஹுதா உமர்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கல்முனை 05, 06, 07 ஆம் கிராம சேவகர் பிரிவுகளுக்கான கிளை புனரமைப்புக் கூட்டம் சனிக்கிழமை தொழிலதிபர் பீ.ரீ.அப்துல் மஜீத் (கபீர்) தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி செயலாளர் மன்சூர் ஏ காதர், தேசிய அமைப்பாளரும், கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சருமான எம்.எஸ்.உதுமாலெப்பை, அம்பாறை மாவட்ட குழுவின் செயலாளரும், முன்னாள்கல்முனைமாநகரசபைஉறுப்பினருமான ஏ.சீ.சமால்டீன், முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினர் எம்.ஏ.கலீலுர் ரஹ்மான் மற்றும்







# யாழில் பலத்த மழை, காற்றால் ஆலயக் கூரை முற்றாக சேதம்





யாழ்ப்பாணத்தில் சனிக்கிழமை மழையுடன் வீசிய காற்று காரணமாக ஆலயம் ஒன்றின் கூரை முழுமையாக சேதமாகியுள்ளதாக யாழ்ப்பாண அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

வேலணை பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட ஜே-21 கிராம சேவகர் பிரிவில் உள்ள ஆலயமொன்றின் கூரையே மழை மற்றும் பலத்த காற்றால் சேதமடைந்துள்ளது.

இருப்பினும், இதனால் யாருக்கும் உயிராபத்து ஏற்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (05)

# புத்தளத்தில் தாழ்நிலப் பகுதிகள் கடும் மழையால் வெள்ளத்தில்



புத்தளம் மாவட்டத்தில் பெய்து வரும் கடும் மழைக் காரணமாக புத்தளம் பிரதேசத்திலுள்ள தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளமையால் மக்களின் இயல்புநிலை பாதிக்கப்பட்டுள்ளது.

குவைட் நகர் மற்றும் பல பிரதேசங்கள் வெள்ளத்தினால் மூழ்கியுள்ளன.

இந்த நிலையில் வீடுகளுக்கள் வெள்ள நீர் உற்புகுந்துள்ளமையால் சுமார் 150 இற்கும் அதிகமான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன



புத்தளம்மாவட்டத்தில்சனிக்கிழமை இரவு முதல் பெய்து வரும் கடும் மழையால் புத்தளம் பிரதேசத்திலுள்ள தாழ்நிலப்பகுதிகளானகடையாக்குளம், தில்லையடி, ரத்மல்யாய, பாலாவி, எனவும் அத்துடன் சில குடும்பங்கள் உறவினர்களின் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனவும் புத்தள மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்தியநிலையம்தெரிவித்துள்ளது. (05)

# ஓட்டோ மோ.சைக்கிள் மோதி ஒருவர் இறப்பு

பாணந்துறை - மஹாவில பிரதேசத்தில் சைக்கிளும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் சைக்கிளில் பயணித்தவர் உயிரிழந்துள்ளார் என அலுபோமுல்ல பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்தில் உயிரிழந்தவர் அலுபோமுல்ல பிரதேசத்தில் வசித்து வந்த 47 வயதுடையவர் ஆவார்.

உயிரிழந்தவர் ஹொரணை - பாணந்துறை வீதியில் பாணந்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த போது, அதே திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள்ஒன்றுசைக்கிளுடன்மோதியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் சைக்கிளில் பயணித்தவரும் மோட்டார் சைக்கிளில் பயணித்தவரும் காயமடைந்து பாணந்துறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் .

பின்னர் சைக்கிளில் பயணித்தவர் உயிரிழந்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (05)

# சீத்தா எலிய கும்பாபிஷேகம்



( பி.கேதீஸ்)

நுவரெலியா சீத்தாஎலிய ஸ்ரீ சீதைம்மன் ஆலய மஹா கும்பாபிஷேக நிகழ்வு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஆலய











தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தலைமையில் நிறைவடைந்தது.

கும்பாபிஷேக நிகழ்வில் வாழும் கலை அமைப்பின் நிறுவனரும் சமாதான தூதுவருமான ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி கோயம்புத்தூர் சுவாமி ஜகதாத்மானந்தா சரஸ்வதி நாடாளுமன்ற உறுப்பினர்களான வேலுகுமார் வடிவேல் சுரேஸ் சீ.பி.ரட்ணாயக்க மருதபாண்டி ராமேஸ்வரன், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ,இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜா, பிரதி தூதுவர் டாக்டர் எஸ்.ஆதிரா உட்பட இந்தியா, நேபாளம், ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் இருந்து வருகை தந்தவர்களும் பெருந்திரளான பக்தர்களும் கலந்து கொண்டனர்.(05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.05.2024இல் வெளியிடப்பெற்றது